REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 மே 8 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 107 | Monday 08, May, 2023 | 16 பக்கங்கள் | 50/-

## தென்கிழக்கு பல்கலையின் 15ஆவது பட்டமளிப்பு விழா

**மே 13, 14ஆம் திகதிகளில் நடத்த ஏற்பாடு**



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதினைந்தாவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் மே மாதம் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பட்டமளிப்பு 06

## சீன, அமெரிக்க, அவுஸ்திரேலிய எரிபொருள் திட்டம் ஆரம்பம்

**ஒரு மாத காலத்தினுள் எரிபொருள், மின் கட்டணம் குறையும்**



சீன, அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்க எரிபொருள் விநியோக நிறுவனங்கள் அவற்றின் செயற்பாடுகளை ஒரு மாதத்துக்குள் ஆரம்பிக்கவுள்ளன.

அதன் பின்னர் எரிபொருள் விலைகள் மேலும் குறைவடைவதோடு, விரைவில் மின் கட்டணத்தில் சலுகைகளும் மக்களுக்கு வழங்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டில் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்கவுள்ள விநியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெறவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் 06

**நாட்டில் இன்புலுவன்ஸா பரவல் அதிகரிப்பு;**

## நோய் அறிகுறி உள்ளவர்களை முகக்கவசம் அணிய பரிந்துரை



நாட்டில் இன்புலுவன்ஸா வைரஸ் பரவும் நிலை அதிகரித்துள்ளது. இதனால், குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருக்கமானவர்கள் யாருக்காவது காய்ச்சல் பரவி வருவதாக இருந்தால் அது தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும். அவர்கள் வீட்டுக்குள்ளேயே முகக்கவசம் அணிந்திருப்பது பாதுகாப்பானதாகும் என கொழும்பு லேடிரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார். நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலையை 06

## யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகம் தனிப்பல்கலைக்கழகமாகும்

**விரைவில் தரமுயர்த்தப்படும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்**



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம் தனி பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொன்னகர் கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் இந்தியன் வீட்டுத்திட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பிலான விடயங்கள் பற்றி பேசும்போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார். 06

**அதிகாரப்பகிர்வு, வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பில்:**

# வடக்கு தமிழ் MP மாரை சந்திக்கிறார் ஜனாதிபதி

**மே 11 முதல் 13 வரை பல சுற்று பேச்சு நடத்த தீர்மானம்**



தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் தீர்க்கமான பேச்சு வார்த்தையொன்றை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அந்தப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 13 ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடர்ச்சியாக கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. பேச்சுவார்த்தைக்கான அழைப்பிதழ்கள் சம்பந்தப்பட்ட எம்பிக்களுக்கு ஜனாதிபதியின் வடக்கிற்கான இணைப்பாளரும் மேலதிக செயலாளருமான இளங்கோவனினால் அனுப்பப்பட்டுள்ளன.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறிப்பாக, அதிகாரப்பகிர்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அம்மாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் 06



இங்கிலாந்து மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டுவிழாவில் பங்கேற்பதற்காக லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மன்னருக்கு தனது வாழ்த்துகளை நேரில் தெரிவித்துக் கொண்டதை படத்தில் காணலாம். அருகில் ஜனாதிபதியின் பாரியார் மைத்ரி ரணில் விக்கிரமசிங்கவும் காணப்படுகின்றார்.

## வெடுக்குநாறிமலைக்கு திடீர் விஜயம் செய்த சரத்வீரசேகர MP

**சேதம் ஏற்படுத்தியமைக்காக நீதிமன்றை நாடவுள்ளதாக தெரிவிப்பு**



வவுனியா வெடுக்குநாறிமலையில் சேதங்களை விளைவித்தமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளதாக முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (06) விஜயம் செய்துள்ளனர். 06

## சீரற்ற காலநிலை காரணமாக 2178 குடும்பங்கள் பாதிப்பு

**ஒருவர் காணாமற் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிப்பு**



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக கடந்த முதலாம் திகதியிலிருந்து நேற்று வரையான காலப் பகுதியில் பல்வேறு மாவட்டங்களிலும் 2178 குடும்பங்களைச் சேர்ந்த 9034 பேர் 06

## யானை தாக்கி முதியவர் பலி

**திருமலை, ஜின்னா நகரில் சம்பவம்**



திருகோணமலை புல்மோட்டை பகுதியில் நேற்று (07) அதிகாலை யானை தாக்கியதில் வயோதிபரொருவர் உயிரிழந்துள்ளார். திருகோணமலை புல்மோட்டை 04 ஜின்னா நகரில் தொடர்ச்சியாக யானையின் அட்டகாசம் இருந்து வரும் நிலையில் நேற்று அதிகாலை 03:30 மணியளவில் யானை குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்துள்ளது. இதை தடுப்பதற்காக 06

## கொழும்பு புறநகரில் இன்று நீர்வெட்டு

**10 மணிநேரம் நீடிக்குமென அறிவிப்பு**



கொழும்பு புறநகர்ப் பகுதிகளில் பத்து மணித்தியால நீர் வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. அதன்படி, இன்றைய தினம் (08) காலை 10.00 06

## இந்திய ரூபாவில் வர்த்தகத்தை தொடரும் பேச்சுவார்த்தை ஆரம்பம்



**மோடியின் முதல் செயலாளருடன் மிலிந்த மொரகொட பேச்சு**

இந்தியாவும் இலங்கையும் 'மின்சக்தி, எரிசக்தித்துறை மற்றும் ரூபாய் வர்த்தகம் தொடர்பான அம்சங்களில்' இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்த உள்ளமையால், இந்திய ரூபாவில் வர்த்தகத்தைத் தொடர்வதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன. இதன்படி, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் 06

## கடலில் மூழ்கி இரண்டு மாணவர்கள் பலி

**மட்டக்களப்பு, கொக்குவிலில் சோக சம்பவம்**



மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சவுக்கடி கடற்கரை பகுதியில் கடலில் குளிக்கச் சென்ற, இம்முறை சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். நேற்று முன்தினம் மாலை வீட்டிலிருந்து வகுப்புக்கு செல்வதாக கூறிச்சென்ற மாணவர்களே இவ்வாறு கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் 16 வயதுடைய 06

## ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு கிழக்கு MPக்களையும் அழைக்கவும்

**இல்லையேல் புறக்கணிப்போம் என TNA கூட்டுக்கட்சிகள் தெரிவிப்பு**



ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு கிழக்கு எம்.பிக்களை அழைக்காவிட்டால் வடக்கு எம்.பிக்கள் சந்திப்பை புறக்கணிப்பர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று முன்தினம் (06) மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் இதனை தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில், 06

**நீண்டகாலமாக பொலன்னறுவை பகுதியிலுள்ள**

## வைத்தியசாலையில் ஒட்சிசன் திருடிய அறுவர் கைது



பொலன்னறுவை பொது வைத்தியசாலையிலிருந்து நீண்டகாலமாக ஒட்சிசன் சிலிண்டர்களை திருடி விற்பனை செய்யும் பாரிய மோசடியில் ஈடுபட்டு வந்த வைத்தியசாலை ஊழியர் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், பொலன்னறுவை குற்றப் புலனாய்வுப் பிரிவின் 06

## வங்காள விரிகுடாவில் பாரிய தாழமுக்கம்; புயல் உருவாகும் வாய்ப்பு

**மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பு**



வங்காள விரிகுடாவில் உருவாகும் காற்றழுத்த தாழ்வுநிலை சில வேளைகளில் புயலாகவும் மாறுவதற்கு வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எனினும், 06

## கொரோனா தொற்றால் மேலும் மூவர் உயிரிழப்பு

**எட்டு பேருக்கு தொற்று கண்டுபிடிப்பு**



நாட்டில் கொரோனா தொற்றினால் மூவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் 06

**சீரற்ற காலநிலை தொடரும்;**

## 16 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை மேலும் சில தினங்களுக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 06

# லண்டன் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க





















கொழும்பு கல்கிசை பரி.தேமவின் கல்லூரியின் 2023 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாடக மன்றம் நடத்திய நாடக விழா கல்லூரியின் பிரதான மண்டபத்தில் (06.05.23) கல்லூரியின் நாடக மன்ற பொறுப்பாசிரியர்களான ஜி. நேசசீலன், திருமதி. எஸ் வதனதாசன்ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக IDM Nations கெம்பஸ் சர்வதேச நிறுவனத்தின் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைமை அறங்காவலருமான கலாநிதி வி.ஜனகன் கலந்து சிறப்பித்து நாடகப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கேடயங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

### குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை இலக்காகக் கொண்ட

# தேசிய போஷாக்குக் கொள்கை அரசாங்கத்தினால் வெளியீடு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தின் புதிய தேசிய போஷாக்குக் கொள்கை சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. நாட்டில் குறைந்த வருமானம் கொண்ட மக்கள், பெருந்தோட்டத்துறை மக்கள் உள்ளிட்ட வறுமை நிலையில் உள்ள மக்களின் நலன்களை இலக்காகக் கொண்டு இந்த தேசிய போஷாக்கு கொள்கை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் அதன் கீழ் நாடளாவிய ரீதியில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் துறை சார்ந்த முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் இந்த போஷாக்குக் கொள்கை உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டு வைக்கப்பட்டது

அந்த நிகழ்வில் விசேட உரையாற்றிய சுகாதார அமைச்சர் மேலதிக செயலாளர் லக்ஷ்மி சோமதுங்க, இலங்கை குறைந்த வருமானம் கொண்ட நாடு என்ற போதும் உணவு பராமரிப்பு மற்றும் போஷாக்குத் துறையில் பலவெற்றிகளைக் கண்டுள்ளது என தெரிவித்தார்.

தேசிய போஷாக்குக் கொள்கையை அறிமுகப்படுத்தும் இந்த விசேட நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனகசிறி சந்ரகுப்தவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, உணவு பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் டாக்டர் பி.எம்.எஸ்.பட்டகொட மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் மேலதிகப் பணிப்பாளர் லக்ஷ்மி சோமதுங்க மேலும் தெரிவிக்கையில், தேசிய போஷாக்கு திட்டமானது எமது நாட்டுக்கு மிகவும் அவசியமானவொன்று. அதற்கான கொள்கை ரீதியான வழிகாட்டல் அவசியமாகும். இந்த ஆக்கபூர்வமான திட்டம் கீழ் மட்டத்திலிருந்து முன்னெடுக்கப்படுவது முக்கியமாகும். நாடு தற்போது பொருளாதார நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ள போது போஷாக்கு

திட்டம் தொடர்பில் வெறுமனே சுகாதார அமைச்சின் பக்கம் கைநீட்டாமல் அனைத்துத் துறைகளும் அந்தத் திட்டத்தில் சம்பந்தப்படுவது அவசியமாகும்.

தேசிய போஷாக்குக் கொள்கை இலங்கையில் மட்டுமன்றி முழு ஆசியாவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இலங்கை குறைந்த வருமானம் கொண்ட நாடு என்ற போதும் இத்துறையில் பல முன்னேற்றங்களைக் கொண்டுள்ளது. சிறந்த பொறிமுறையுடன் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.





சென்னையில் உள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகராலயம் வெசாக் கொண்டாட்டத்தை சான்சரி வளாகத்தில் (06) நடத்தியது. வெசாக் கொண்டாட்டத்தில் போதி பூஜை மற்றும் பௌத்த பிரசங்கத்தை சென்னை மஹா போதி சங்கத்தின் தலைமை பொறுப்பாளர் வணக்கத்துக்குரிய நுககொல்லே சந்தரதன தேரர் நடத்தினார்.

### அநு. போதனா வைத்தியசாலை கொலை சம்பவம்;

# பிரதான சந்தேக நபர் உட்பட உடந்தையாக இருந்தவரும் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர் ஒருவரை கொடூரமான விதத்தில் வெட்டிக் கொலை செய்த பிரதான சந்தேக நபரும் அதற்கு உடந்தையாக இருந்த ஒருவரையும் கொழும்பு தெமட்டகொட பிரதேசத்தில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி விஹாரை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரும் மதவாச்சி குவுக்கொல்லாவ பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவருமே அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கு பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டிருந்ததுடன்அநுராதபுரம்உதவி பொலிஸ் அத்தியட்சகர் சஞ்ஜீவ மஹானாமவின் கீழ் செயற்பட்டு வரும் தீர்க்கப்படாத குற்றங்கள் பிரிவின் உத்தியோகத்தர் குழுவினர் தெமட்டகொட பகுதிக்குச் சென்று சஹல்புர தொடர்மாடி வளாகத்திற்கு அருகில் மறைந்திருந்த நிலையில் இரு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் (26) மதவாச்சி நகருக்கு அருகாமையில் பெண்கள் உள்ளிட்ட குழுவினரின் தாக்குதலில் படுகாயமடைந்திருந்த நிலையில் நபரொருவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பேராசிரியர் பிரிவில் 66ஆம் வார்ட்டில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த (28) காலை 4.30 மணியளவில் கொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



புனித ரமழான் மாதத்தில் இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் வினா விடைப்போட்டி மற்றும் விசேட போட்டிப்பரீட்சைக்கான பரிசளிப்பு விழா தர்காநகர் ஏஸியம் கல்வியகத்தில் மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலய அதிபர் ஏ.ஸீ.எம். றிப்கான் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. போட்டிப் பரீட்சையில் 189 புள்ளிகள் பெற்ற ஆர்.ஏ.எப். ரஹ்மா என்ற மாணவிக்கான கிண்ணத்தை விழாவின் பிரதம அதிதி வைத்திய கலாநிதி றியாஸ் கனி வழங்கி வைப்பதனையும், வினா விடைப்போட்டியில் வெற்றியீட்டிய எம்.ஆர். அயாத் அஹமட் என்ற மாணவனுக்கு சிறப்பு அதிதி வெலிப்பென்ன ரஹ்மானியா தேசிய பாடசாலை விஞ்ஞான பாட ஆசிரியை எம்.என். நுபைலா பரிசினை வழங்கி வைப்பதனையும் படங்களில் காணலாம். *(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)*

# பதுளையில் 'அல்மா' அனுசரணையில் உலர் உணவுப் பொதிகள் விநியோகம்

**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கப் பேரவையின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் தேவையுடையவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வருகின்றன. நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நிகழ்வு பேரவையின் தேசியத் தலைவர் இஹ்ஸான் ஏ.ஹமீட் தலைமையில் அன்மையில் பதுளைப் பகுதியில் உள்ள தேவையுடைய ஏழை மக்களுக்கு அல்மா தொண்டு அமைப்பின் அனுசரணையுடன் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இதன்போது பேரவையின் பதுளை மொனராகலை மாவட்ட



பிரதிப் பணிப்பாளர் ஏ.ஏ.ஜூனைடீன், திட்ட முகாமையாளர் எஸ்.எம்.நாசிம், பதுளை முன்னாள் பிரதித் தலைவர் ஜே.ஏ.பளூளூன், முஸம்மில் அசீஸ் உள்ளிட்ட பேரவையின் பதுளை பிராந்திய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 மே 8 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 04.37
லுஹர் - 12.09
அஸர் - 03.27
மஃரிப் - 06.19
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் சித்திரை 25
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## கடன் மறுசீரமைப்புக்கு ஜப்பான் பூரண ஆதரவு

இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயார்



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜப்பான் ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளது.

இருதரப்பு கடன் வழங்குனர்களை ஒருங்கிணைத்து இந்தக் கடன் மறுசீரமைப்புச் செயல்முறையை மேற்கொள்ள எதிர்ப்பார்ப்பதாக ஜப்பானிய நிதியமைச்சர் சுசுகி சுஞ்சி சுட்டிக்காட்டியுள்ளார்.

06

# துறைமுகம் மூலம் முன்னெடுக்கப்படும் ஏற்றுமதி வர்த்தக மோசடிகள்

## சுங்கப் புலனாய்வு பிரிவினால் விசாரணை ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு துறைமுகம் மூலம் முன்னெடுக்கப்பட்டு வரும் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள் மூலம் நாட்டின் நற்பெயருக்கு களங்கமேற்படுவதாகவும் அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனையடுத்து சுங்கத் திணைக்களத்தின் புலனாய்வு பிரிவு அதிகாரிகளினால் மேற்படி சட்டவிரோத வர்த்தகம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



வேறு நாடுகளிலிருந்து பொருட்களை நாட்டுக்கு இறக்குமதிசெய்து சுங்கக் கட்டணமின்றி துறைமுகத்தில் அதனை வைத்தபின்னர் மீண்டும் வேறொரு நாட்டிற்கு அந்தப் பொருட்களை விற்பனை செய்வது அந்த செயல்பாடுகள் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதுதொடர்பிலேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் அவ்வாறான பொருட்கள் மற்றுமொரு நாட்டுக்கு ஏற்றுமதிசெய்யப்படும் போது இலங்கையிலிருந்து அது அனுப்பப்படுவதாக

06



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடு செய்திருந்த வெசாக் பண்டிகையையொட்டிய நிகழ்வு பத்தரமுல்லையிலுள் சுஹுறுபாயவின் முன்றலில் அமைச்சர் டிரான் அலஸின் தலைமையில் கடந்த மே 02 ஆம் திகதி முதல் 05 ஆம் திகதி வரை நடைபெற்றது. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் அமைச்சரினால் சிறுவனொருவனுக்கு தானம் வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.

பாதுகாப்பு அதிகாரி வசமிருந்த துப்பாக்கி விவகாரம்;

## இந்தியாவுக்கான விமானம் நான்கு மணித்தியாலம் தாமதம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாதுகாப்பு அதிகாரியொருவர் வசமிருந்த துப்பாக்கி காரணமாக கட்டுநாயக்காவிலிருந்து இந்தியாவுக்கு பயணிக்கவிருந்த விமானமொன்று நேற்று நான்கு மணித்தியால காலதாமதத்தை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

கட்டுநாயக்கவிலிருந்து இந்தியாவின் சென்னை நோக்கி பயணிக்கவிருந்த விமானம் பாதுகாப்பு அதிகாரியொருவர் துப்பாக்கியுடன் விமான பயணிகள் முனையத்திற்கு வருகை தந்து குறித்த விமானம் நான்கு மணித்தியாலங்கள் தாமதமாகியே பயணத்தை மேற்கொண்டதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

06

இறுதிக் காலாண்டில்

## அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க திட்டம்

ஐ.தே.க பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்த வருடத்தின் இறுதிக் காலா ண்டில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பத ற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்ததபின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அரசாங்க ஊழியர்களின் சம்பளம்

06

## ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த மாதம் முதல் சத்துணவு திட்டம்

இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சிறுவர்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கும் வகையில் விசேட வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அந்த திட்டத்தின் கீழ் அடுத்த மாதம் முதல் சத்துமிக்க பிஸ்கட்டுக்களை ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாம் சிறுவர்களின் போசாக்கு தொடர்பில் புதிய

06

## பசில் ராஜபக்ஷ நேற்று துபாய் பயணம்

விமான நிலைய வட்டாரங்கள் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ நேற்று துபாய்க்கு பயணித்துள்ளதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

அவருடன் அவரது பாரியாரும் துபாய்க்கு சென்றுள்ளதுடன் நேற்று அதிகாலை எமிரேட்ஸ் விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான விமானமொன்றிலேயே அவர்கள் இருவரும் பயணித்துள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பசில் ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியாரும் துபாய்க்கு சென்று அங்கிருந்து அமெரிக்காவுக்கு பயணிக்க

06

சட்டவிரோத வெளிநாட்டுப் பயணம்:

## ஆழ் கடல் மீன்பிடிப் படகுடன் ஆறு பேர் மன்னாரில் கைது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சட்டவிரோதமாக கடல் வழி மார்க்கமாக வெளிநாட்டுக்கு செல்லவிருந்த ஆறு நபர்களையும் அவர்களுடன் ஒரு ஆழ்கடல் மீன்பிடிப் படகையும் மன்னார் கடற்பரப்பில் வைத்து கைப்பற்றியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார்,எருக்கலம்பட்டி கடல் பிரதேசத்தில் வைத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

06

## மாவின் விலையில் சிறு விலை அதிகரிப்பு?

இறக்குமதியாளர் சங்கம் தெரிவிப்பு



இறக்குமதி வரி அதிகரிப்பு காரணமாக 10 ரூபா அல்லது அதனை விட குறைந்த தொகையில் கோதுமை மா ஒரு கிலோகிராமின் விலை உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன இந்த விடயத்தை

06

## முல்லைத்தீவிலிருந்து 10 பேர் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம்

அண்மைக்காலமாக இதுவரை 244 பேர் சென்றுள்ளனர்



தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் 10 இலங்கை தமிழர்கள் சனிக்கிழமை (06) தமிழகத்தை சென்றடைந்துள்ளனர். கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் இலங்கையில் இருந்து 244 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடிக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

இலங்கை முல்லைத்தீவு மாவட்டம் 8 ஆம் வட்டாரம் பகுதியை சேர்ந்த இரண்டு ஆண்கள், நான்கு பெண்கள்,

06


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**திறைசேரி உண்டியல்கள் வழங்கல்**

**2023 மே 10ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 140,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123H111 | LKA18223K104 | LKA36424E109 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 80,000 | 30,000 | 30,000 | 140,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 மே 10
தீர்ப்பனவுத் திகதி : 2023 மே 12
வழங்கப்படும் திகதி : 2023 மே 12
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 மே 10, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk







## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 206.30 | 219.03 |
| கனடியன் டொலர் | 228.52 | 242.56 |
| யூரோ | 343.37 | 362.22 |
| ஜப்பான் யென் | 2.3420 | 2.4688 |
| சிங்கப்பூர் டொலர் | 233.49 | 246.88 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.64 | 409.24 |
| சுவிஸ் பிராங்க் | 349.42 | 371.48 |
| அமெரிக்க டொலர் | 313.45 | 328.67 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 853.41 | கட்டார் ரியால் | 88.05 |
| குவைத் டினார் | 1,050.55 | சவூதி ரியால் | 85.78 |
| ஓமான் ரியால் | 835.69 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 87.61 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 25ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 17

### குறள் தரும் சிந்தனை



மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழையார்
வேண்டாப் பொருளும் அது

*கடமையுடன் கூடிய செயல்புரியப் புறப்பட்டவர்கள் இல்லற சுகத்தைப் பெரிதெனக் கருதினால் சிறப்பான புகழைப் பெற மாட்டார்கள்.*

## மக்கள்நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் ஒதுக்கீடு

உலகில் மக்களின் நலனோம்புதல் சேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயற்படும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்தே மக்கள் நலனோம்புதல் கொள்கையை இந்நாடு முன்னெடுத்து வருகிறது. இலவசக் கல்வித் திட்டம், இலவச சுகாதார சேவை அவற்றில் குறிப்பிடத்தக்க திட்டங்களாகும். இந்த இரு துறைகளுக்கும் வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக வருடா வருடம் கோடானுகோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படுகிறது. இந்த ஒதுக்கீடுகளை செலவாக அன்றி முதலீடாகவே இலங்கை நோக்குகிறது.

இவ்விதமான சமூக நலனோம்புதல் திட்டங்களின் ஊடாக நாட்டு மக்கள் பல்வேறு நன்மைகளையும் அடைவுகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர். தென்னாசியப் பிராந்தியத்தில் 92 வீதத்திற்கும் மேற்பட்ட எழுத்தறிவை கொண்ட மக்கள் வாழும் நாடாகவும், மக்களின் சராசரி ஆயுள் 77 வருடங்களுக்கும் மேற்பட்டதாக உள்ள நாடாகவும் இலங்கை விளங்குவதற்கு இத்திட்டங்கள் பாரிய பங்களிப்பு செய்துள்ளன. அத்தோடு வளர்ச்சி அடைந்த நாடுகளின் மட்டத்தில் கல்வியும் சுகாதார சேவையையும் காணப்படுவதற்கு அவை ஒழுங்குமுறையாக இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படுவதே காரணமாகும்.

இந்நிலையில் இந்நாட்டின் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் நலனோம்புதல் குறித்தும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் நிமித்தமும் வருடா வருடம் கோடிக் கணக்கான ரூபா நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்படுகின்றது.

குறைந்த வருமானம் பெறுபவர்கள், வறுமைக்கு உள்ளாகியுள்ளவர்கள், சிரேஷ்ட பிரஜைகள், சிறுநீரக நோயாளர்கள் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்குள் உள்ளடங்குபவர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தியே இவ்வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வலையமைப்புகளுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளவர்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதே இத்திட்டங்களின் பிரதமான நோக்கமாகும்.

கடந்த வருடம் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி, வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதையும் அவர்களுக்கு சுமையாக அமைவதையும் தவிர்ப்பதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது இதற்கென பல நிவாரணத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக கடந்த வருடம் 142 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் இன்னும் முழுமையாக நீங்கியதாக இல்லை. அதனால் மக்களின் சமூகப் பாதுகாப்பு நலனோம்புதல் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளைக் குறைக்காமல் முன்னரை விடவும் அதிகமாகப் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான பணிப்புரைகளை நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார்.

அந்த வகையில் கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென மேலும் 45 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இதன்படி, இவ்வருடம் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 187 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவிருப்பதாகவும், இதற்கு சர்வதேச நாணய நிதியமும் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாப்பிட்டிய, 'இதன் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு அடுத்த மாதம் முதல் பிரதிபலன்கள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கூறியுள்ளார்.

இதனை வறிய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்குள் உள்வாங்கப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

நாட்டு மக்களின் நலனோம்புதல் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், அதற்கான நிதியொதுக்கீடுகளில் கடந்த காலங்களில் ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 2 வீதமே மக்களின் நலனோம்புதல் நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டது. அது இவ்வருடம் (2023) 18 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இது சாதாரணமானதொரு ஒதுக்கீடு அல்ல. அதுவும் மிகவும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி மீட்சி பெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் இவ்வளவு பாரிய தொகையைச் சமூகப் பாதுகாப்புக்காக செலவிடக்கூடிய நிலையை நாடு இன்னும் அடைந்திராத நிலையிலும் அவ்வளவு தொகை நிதியொதுக்கீடு மேற்கொள்வது என்பது இமாலயச் சாதனையாகும். சமூகப் பாதுகாப்பு திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளவர்களின் நலன்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதையே இந்த ஒதுக்கீடும் பணிப்புரைகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆகவே இத்திட்டங்களின் பிரதிபலன்கள் உரிய மக்களைச் சென்றடைவதையும் அதன் ஊடாக அவர்கள் உச்ச பலன்களை அடைந்து கொள்வதையும் உறுதிப்படுத்திக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அது மிகவும் இன்றியமையாத விடயமாகும்.

editor.tkn@lakehouse.lk

# உலக நாடுகளின் பார்வையை லண்டனை நோக்கி குவிய வைத்த சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டுவிழா



பிரித்தானிய காலனித்துவ காலத்தின் போது சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியமாகத் திகழ்ந்த இங்கிலாந்தின் புதிய மன்னராக மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் (வயது 74) நேற்று முன்தினம் முடிசூட்டப்பட்டார். புதிய மன்னரின் முடிசூட்டுவிழா பிரித்தானியாவில் நேற்றுமுன்தினம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.இவ்விழாவையொட்டி லண்டன் மாநகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.

இரண்டாம் எலிசபெத் மகாராணி கடந்த செப்டம்பரில் காலமானதையடுத்து, அவ்வேளையில் இளவரசராகவிருந்த மூன்றாம் சார்ள்ஸ் இங்கிலாந்தின் மன்னர் அரியணைக்கு உரித்துடையவரானார்.

## 203 நாடுகளின் அரசதலைவர்கள் பங்கேற்பு; ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பாரியார் சகிதம் பங்கேற்று நேரில் வாழ்த்து

மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டு விழா தலைநகர் லண்டனில் அமைந்துள்ள வெஸ்ட்மினிஸ்டர் அபே தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் கோலாகலமாக நடைபெற்றது. பிரித்தானியாவில் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டுவிழாவுக்குப் பின்னர் 70 ஆண்டுகள் கழித்து நேற்றுமுன்தினம் முடிசூட்டு விழாவொன்று நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயம் வரை நடைபெற்ற கண்கவர் வாகனப் பேரணியுடன் முடிசூட்டு விழா ஆரம்பமானது. மன்னர் சார்ள்ஸும் அவரது மனைவி கமிலாவும் ஒவ்வொரு முடிசூட்டு விழாவுக்கும் பயன்படுத்தப்படும் தங்க இரதத்தில் அல்லாமல், வைரவிழா அரச இரதத்தில் வெஸ்ட்மினிஸ்டர் அபே நோக்கி பயணித்தனர்.

பின்னர் கிரேட் வெஸ்ட் நுழைவாயில் வழியாக உட்பிரவேசித்த சார்ள்ஸ் மன்னர், தேவாலயத்தின் மத்திய பகுதியூடாகச் சென்று முடிசூட்டும் இருக்கையில் அமர்ந்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க புனித எட்வேர்ட் மகுடத்தை சூட்டுவதற்காக றோயல் கதிரையில் அவர் அமர வைக்கப்பட்டார். பிரித்தானிய வரலாற்றில் இதுவரை 26 மன்னர்கள் மற்றும் மகாராணிகளுக்கு அங்கு கிரீடம் சூட்டப்பட்டுள்ளது.

புனித எண்ணெய் சார்ள்ஸ் மன்னரின் தலை, உடல் பகுதியில் தேய்த்து விடப்பட்டதுடன் அவரது தலை, நெஞ்சு மற்றும் கைகளில் சிலுவை அடையாளமிடப்பட்டு இராஜபிஷேகம் இடம்பெற்றது.

பின்னர் அரசரிடம் மதம் மற்றும் அரச குடும்பத்தின் அதிகாரத்தை கையளிக்கும் வகையில் அரச குடும்ப புனித உருண்டை அளிக்கப்பட்டு, அரசு அதிகாரங்களை அளிக்கும் செங்கோல் ஒப்படைக்கப்பட்டது.

இதனையடுத்து நியாயம், கருணை போன்ற உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் வெள்ளை நிறத்தால் உருவாக்கப்பட்ட வாத்து ஒன்றும் கையளிக்கப்பட்டது. அதன் பின்பு இறுதியாக மன்னரின் தலையில் பேராயர் புனித எட்வேர்ட்டின் கிரீடம் சூட்டப்பட்டது. புனித எட்வேர்ட்டின் கிரீடத்தை சூடிய 07 ஆவது மன்னராக மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் வரலாற்றில் பதிவானார்.

22 கரட் தங்கத்தால் உருவாக்கப்பட்ட 360 ஆண்டுகள் பழைமையான இந்தக் கிரீடம் 30 செ.மீற்ற ருக்கும் அதிக உயரமும் 2. 23 கிலோகிராம் எடையும் கொண்டதாகும். இதன் போது ட்ரம்பட் வாத்தியம் இசைக்கப்பட்டதுடன் ஐக்கிய இராச்சியம் முழுவதும் மரியாதை வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.





இந்த முடிசூட்டு விழாவில் இராணி கமிலாவுக்கு உரிய சடங்குகள் நிறைவேற்றப்பட்டு இராணிக்கான கிரீடம் சூட்டப்பட்டு அரியணையில் அமர்த்தப்பட்டார். ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவில் இராணி மேரியின் முடிசூட்டு விழாவிற்காக பயன்படுத்தப்பட்ட கிரீடமே அவருக்கு சூட்டப்பட்டது.

இதனையடுத்து மன்னரும் இராணியும் சிம்மாசனங்களில் இருந்து எழுந்து புனித எட் வேர்ட் தேவாலயம் நோக்கிச் சென்றனர். அங்கு மன்னரின் தலையிலிருந்து புனித எட்வேர்ட் கிரீடம் கழற்றப்பட்டதுன் மன்னருக்கான முடிசூட்டப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதன் பின்னர் மன்னர் அங்கிருந்து வெளியேறினர். அரச குடும்பத்தினர் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு மீண்டும் புறப்பட்டனர்.

1831 இல் மன்னர் ஆறாம் வில்லியம் முடிசூடப்பட்டதிலிருந்து ஒவ்வொரு முடிசூட்டு விழாவிலும் பயன்படுத்தப்பட்டு வந்த 260 ஆண்டுகள் பழைமையான தங்க அரச இரதத்தில் இவர்கள் இம்முறை பயணித்தமை விசேடம்சமாகும்.

இளவரசராகவிருந்த அவர் 1981 ஆம் ஆண்டு டயனாவை மணமுடித்தார்.

1982ஆம் ஆண்டு இளவரசர் வில்லியமும், 1984 ஆம் ஆண்டு இளவரசர் ஹரியும் பிறந்தனர். 1996 ஆம் ஆண்டு இளவரசி டயனாவுடனான விவாகரத்தையடுத்து அவர் 2005 ஆம் ஆண்டு இளவரசி கமிலாவை கரம்பிடித்தார். அதன் மூலம் இராணியாகியுள்ளார் கமீலா.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முடிசூட்டு விழாவில் அரச குடும்பத்தின் உறுப்பினர்கள், 203 நாடுகளைச் சேர்ந்த அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர்.

முடிசூட்டு விழாவுக்கான பாதுகாப்புக் கடமைகளில் 11 ஆயிரத்திற்கும் அதிகளவான பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், முடிசூட்டு விழா பல சர்வதேச ஊடகங்களில் நேரடி ஒளிபரப்பப்பட்டது.

சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பாரியார் மைத்ரி விக்கிரமசிங்க சகிதம் பிரிட்டன் சென்றிருந்தார். மன்னர் சார்ள்ஸ் முடிசூடிக் கொண்டதன் பின்னர் உலகத் தலைவர்கள் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பாரியார் சகிதம் மன்னர் சார்ள்ஸுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

முடிசூட்டு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றதையடுத்து ஐக்கிய இராச்சியம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் மன்னராக 3ஆவது சார்ள்ஸும், இராணியாக அவரது மனைவி கமிலாவும் திகழவுள்ளனர்.

# இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஏற்பாட்டில் வவுனியா, நுவரெலியா மாணவர்களுக்கு நிதியுதவி

அவுஸ்திரேலியாவில் கடந்த 35 வருடங்களுக்கும் மேலாக இயங்கி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் சமீபத்தில் தமிழ் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவுகளை வழங்கியது. அந்நிதியத்தின் உதவியை வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மலையகத்தின் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தமிழ் மாணவர்கள் பெற்று வருகின்றனர். மேற்படி நிதிக்கொடுப்பனவுகள் அண்மையில் வவுனியாவிலும் நுவரேலியாவிலும் வழங்கப்பட்டன.

வவுனியாவில் சூசைப்பிள்ளையார் குளம் பகுதியில் இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் தொடர்பாளர் அமைப்பான நலிவுற்ற அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் (Voluntary Organization for Vulnerable Community Development (VOVCOD) அலுவலகத்தில் அண்மையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் தர்மலிங்கம் கணேஷ் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் நிறுவன இணைப்பாளர் திருமதி கிருஷாந்தி, நிதி இணைப்பாளர் திருமதி சுகன்யா, முகாமைக்குழு உறுப்பினர்கள் திருமதி தனிஷா, திருஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்கான நிதிக்கொடுப்பனவு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. குறிப்பிட்ட மாணவர்களும், அவர்களின் தாய்மாரும் பாதுகாவலர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கான தகவல் அமர்வும் இடம் பெற்றது.







அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவியைப் பெறும் மாணவர்களின் அரையாண்டு கல்வி உதவிப்பணமும் அவர்களின் வங்கிக் கணக்கில் வைப்பு செய்யப்பட்டது.

கல்வி நிதியத்தின் மலையக தொடர்பாளர் அமைப்பான மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் (Plantation Community Development Organization) கண்காணிப்பில் உதவிக்குரிய மாணவர்களுக்கும் அண்மையில் இந்த ஆண்டுக்கான முதல் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டது.

குறிப்பிட்ட அமைப்பின் தலைவர் அரியமுத்து தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விலும் உதவிபெறும் மாணவர்களின் தாய்மாரும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கும் கடந்த மாதம் நிதியுதவி யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் வழங்கப்பட்டது. இம்மாவட்டங்களின் மாணவர் கண்காணிப்பு நிறுவனமாக யாழ்ப்பாணம் அரியாலையில் இயங்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையம் (Centre for Child Development) இயங்குகிறது.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஜுலை மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்திலும் முல்லைத்தீவிலும், வவுனியாவிலும் கிழக்கு மாகாணத்திலும் மலையகத்திலும் மாணவர் ஒன்றுகூடலுக்கான நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

**லெ.முருகபூபதி...**
*அவுஸ்திரேலியா.*

# மனித மேம்பாட்டு அமைப்பு – ஸ்ரீலங்கா ஏற்பாட்டில் கல்முனையில் இளைஞர் தலைமைத்துவ மாநாடு

'பொருளாதார நெருக்கடியில் இருந்து இளைஞர் சமுதாயத்தினை மேலோங்க செய்தல்' எனும் தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு தலைமைத்துவ மாநாடு கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் காரியப்பர் மண்டபத்தில் நடைபெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீலங்காவின் ஸ்தாபக தலைவர் எஸ். ஏ முஹம்மது அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இந்தியாவில் இருந்து வருகை தந்த சென்னை ரொக் ஸ்டார் குழுவின் இணை நிறுவனர் தலைவர் பாலகுமார் கலந்து கொண்டதோடு, விஷேட அதிதியாக ஷெய்யிட் குழும நிறுவனத்தின் தலைவர் எஸ். ஷெய்யிட் பங்கேற்றார்.

கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளரும், மனித மேம்பட்டு அமைப்பின் தேசிய அமைப்பாளருமான ஐ. எல். எம். இர்பான், பொனிக்ஸ் குழுமத் தலைவர் எஸ். எம். சரன்ராஜ், இலங்கை சவாட் கிக் பொக்சின் கூட்டமைப்பின் தலைவர் எஸ். பாரிஸ் மௌலானா, யு. எல். எம். அஸ்ஹர் ஜமாலி, எஸ். சராபா





மற்றும் ஏ. குமார் போன்ற பலர் கலந்து சிறப்பித்தனர்! நிகழ்வின் முக்கிய வளவாளர்களாக ஷெய்யிட் குழும முகாமையாளர் ஸாகிரா இஸ்மாயில் தலைமைத்துவம் பற்றிய சொற்பொழி ஆற்றினார். ஷெய்யிட் குழுமத்தின் ஒருங்கிணைப்பாளர் கே. எப். பசீஹா பர்வீன் 'நேர முகாமைத்துவம்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடத்தினார். அதனைத் தொடர்ந்து, ஷெய்யிட் குழும நிறுவனத்தின் தலைவர் எஸ். ஷெய்யிட் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உரையாற்றினார். அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 160 இளைஞர், யுவதிகள் கலந்து சிறப்பித்தனர்.

# கதிர்காமத்தில் ஆடிவேல் விழாவிற்கான கன்னிக்கால் நடப்பட்டது

காரைதீவு குறூப் நிருபர் சகா

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்தின் மாங்கல்ய சடங்கு கன்னிக்கால் அல்லது பந்தல் கால் நடும் நிகழ்வு (6) சனிக்கிழமை அதிகாலை இடம் பெற்றது.

கதிர்காம கந்தன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர தலைமையில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

முகூர்த்தத்தில் குவளை நடும் நிகழ்வு இடம்பெற்றது. பழங்கால முறைப்படி வெட்டப்பட்ட கம்புகள், மாணிக்க ஆற்றில் குளிப்பாட்டப்பட்டு, இரவு வள்ளி அம்பாள் திருக்கோவிலில் வைக்கப்பட்டது. அன்று காலை சுப முகூர்த்தத்தில்



ஆலத்தி மக்களின் துணையுடன் ராலா மற்றும் கடைக்காரர் கப்புராளை தலைமையில் கடமையாற்றும் குழுவினர் கப்கனு மகா தேவாலயத்திற்கு கொண்டு சென்றனர்.

கதிர்காமம் பெரிய ஆலயத்தின் கப்பை சுப வேளையில் கப்புராளை தலைமையில் கடமையாற்றும் குழுவினர் ஆலத்தி ஆலயத்திற்கு கொண்டு சென்று கப்பை நட்டனர். அதன்படி, அன்று முதல் 45 நாட்களுக்குப் பின்னர் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த எசல பெரஹெரா ஆடிவேல் திருவிழா ஜூன் 19ஆம் திகதி ஆரம்பமாகி, ஜூலை 03ஆம் திகதி மஹா பெரஹெரா இடம்பெற்று, ஜூலை 04ஆம் திகதி காலை மாணிக்ககங்கையில் நீர் வெட்டும் சடங்குடன் அதாவது தீர்த்தத்துடன் நிறைவடையும்.

# மானுடவியல்

(தொடர்)



## சாக்கிய நாயனார்

115

ஒவ்வோர் மனிதனுந் தான் உலக நன்மைக்காகவே வாழ்வதாகச் சொல்லிக்கொள்வதிற் புதுமையேதுமில்லை. அவன் அதற்காகத் தான் வாழ்கிறதற்கு உத்தரவாதம் அளிக்கும் மனிதநேயப் பண்பு அவனிடத்தில் உரிய அளவுக்கு இருக்கக் காண்டலில் மட்டும் புதுமையுண்டு. அதுபோல் சமயம் ஒவ்வொன்றும் தான் ஆன்ம விமோசனத்திற்காகவே நிற்பதாகச் சொல்லிக் கொள்வதில் அல்ல அதற்கு உத்தரவாதமளிக்கும் தரவுகள் அதில் இருக்கக் காண்டலில் மட்டும் புதுமையுளதாம். ஒரு சமயம் உலகமேயுண்டு கடவுள் இல்லை என்னும், மற்றொன்று கடவுளே உண்டு உலகம் இல்லை என்னும். இன்னொன்று



வினையுண்டு அதைச் செய்வோனுமில்லை செய்விப்போனுமில்லை என்னும். பிறிதொன்று வினையுண்டு செய்வோனுமுண்டு செய்விப்போன் இல்லை என்னும். இப்படிச் சமயங்கள் பலவற்றில் உலகு, உயிர், கடவுள், வினை ஆகியவற்றின் பேரில் முரண்பாடானவையும் நிரம் பாதவையுமான கருத்துக்கள் இருத்தலால் ஆன்ம விமோசனத்துக்கு யதார்த்தமான உத்தரவாதம் அணிக்குந் தரவுகளைப் பூரணமாகக் கொண்ட சமயம் யாதாயிருக்கும் எனக் காண்பது கஷ்ட சாத்தியமாயினும் அது, பின்வருமாற்றால் ஓரளவில் இலகுவிற் கைகூடும் உபாயமுமொன்றிருத்தல் குறிப்பிடத்தகும். விமோசனம் எனவே எதற்கு விமோசனம்? எதிலிருந்து விமோசனம்? எதற்காக விமோசனம்? என்ற விசாரம் இயல்பாகவே எழற்பாலதாம். மற்றும் விஷயங்கள் போல எதிர்நிறுத்திக் காணப்படாதாயினும் ஒவ்வொரு கணமும், "நான் உளேன்" என்பதோர் பிரக்ஞை நிகழச்செய்து கொண்டு நம்மிடத்தில் உள்ள தொன்றுண்டு; அது சதா இன்பதுன்ப மயக்கங்களாற் கட்டுண்டிருக்கிறது.இவற்றிலிருந்து நீங்க வேண்டும் என்ற எண்ணம் இன்புறும் வேளையில் இல்லாவிடினும் துன்புறும் வேளையிலும் மயக்கமுறும் வேளையிலும் தற்காலிகமாக அதற்கு இருந்தே தீர்கிறது. (தொடரும்)

கலாநிதி சிவஶ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# சைவ மஞ்சரி

## "யுகரிஷியின் ஆன்மீக சிந்தனைகள் - 37



இதே போல் மனிதன் ஒருவன் தனது நடை, உடை, பாவனை, நடத்தை. குணம் செயல் ஆகியவைகளால் உருவாகும் நற்பலன்களின் மூலமும் அனுபவ பாடம் கற்றுக் கொள்ள முடியும். தன்னை சீர்த்திருத்திக் கொண்டு பிறப்பின் நோக்கத்தை அடைவதற்கான வழியில் நடந்து ஒருவன் நற்கதி பெற வேண்டும். அதாவது நற்சேர்க்கை, சுய ஆய்வு, சிந்தனை, அனுபவம் ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு நல்லறிவு பெற வேண்டும். வேண்டும். இம் முயற்சியை தொடர்ந்து செய்திட வேண்டும்.

ஞானமில்லாத வாழ்வு பொருளற்றது. அறியாமையானது இம்மை (உலக வாழ்க்கை) மற்றும் மறுமை (ஆன்மீக வாழ்க்கை) ஆகியவற்றை நாசமாக்கி விடும். எனவே அறியாமை இருளிலிருந்து விலகி, ஞான தீபத்தின் ஒளியை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். தனது சோம்பலையும் கவனமின்மையையும் நீக்கி விட்டால் தன்னுடைய பலவீனம் அகன்று விடும் என்பதை மனிதன் உணர வேண்டும். பின்னர் அவன் வாழ்வு சிறப்புற்று விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மனிதன் தனக்குத் தானே ஒரு முழுமையான மூலக்கூறு ஆவான். அவனுக்குள்ளேயே அனைத்து சக்திகளும், பிறந்ததிலிருந்தே உள்ளன. அந்த சக்தியை ஆதாரமாகக் கொண்டு, எந்த நிலையிலும் நாம் முழுமையான வெற்றியின் சிகரத்தை தொட்டுவிட முடியும்.

மனிதனுடைய உள்ளத்தின் விழிப்புணர்வே, அனைத்து தெய்வங்களின் பிரதிநிதியாகும். உந்தன் சக்தி உன் உள்ளத்தில் உறங்கி கிடக்கும் வரை, அதற்கு எவ்வித மதிப்பும் இருக்காது. அந்த சக்தி விழித்துக் கொள்ளும் போது, நம்மை சுற்றி நாலாபுறமும் அதிசய ஞான ஒளி பிரகாசிக்கும்.

நம் நற்குணங்களோ அல்லது தீயகுணங்களோ தான், நாம் பெற்றிருக்கும் உன்னத நிலை அல்லது அவலநிலைக்கு காரணம் ஆகும். வெளிப்புற லாபநட்டங்கள், உதவி இடைஞ்சல்கள் இவை யாவும் நம்மை உயர்த்துவதில்லை அல்லது தாழ்த்துவதில்லை. நம் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாமே பொறுப்பு. எவன் தன்னை உணர்ந்து, தன் குறைகளை களைந்து நேர்மறை சிந்தனையுடன் செயல்படுகிறானோ அவன் வெற்றிக் கோட்டைக்கு மிக அருகில் இருக்கிறான். எவன் ஒருவன் தனது உள்ளாற்றலை புரிந்து கொண்டு அதனை தட்டி எழுப்புகிறானோ அவனிடம் அபரிதமான தெய்வசக்தி மிகுந்து காணப்படும்.

# வத்தளை, மாபொல, பங்களாவத்தை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய தேர்த்திருவிழா நாளை

வத்தளை, மாபொல, பங்களாவத்தை அருள்மிகு ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் முதலாவது வருஷாபிஷேகம் கடந்த 30 ஆம் திகதி காலை நடைபெற்று கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகியது. அன்று மாலை மாரியம்மன் ஆலய திருவிழாவும் நடைபெற்றது.

கடந்த 2ஆம் திகதி முதல் மாலை 4. 30 மணிக்கு அருள்மிகு ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட அபிஷேகங்களும் பூஜைகளும் நடத்தப்படுவதுடன் தினமும் வசந்த மண்டப பூஜைகளும் நடத்தப்பட்டு அம்பாள் உள்வீதி வலம் வந்து அருள்பாலிக்கும் நிகழ்வும் இடம்பெறுகிறது.

இந்நிகழ்வுகள் இவ்வாறு எதிர்வரும் 8ஆம் திகதி வரை நடைபெறும். எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை அஷ்டோத்திரசதா சங்காபிஷேகம், அபிஷேகம், பூஜை என்பன நடத்தப்படும்.

அன்று பிற்பகல் 2 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடத்தப்படும். அதனைத் தொடர்ந்து வண்ணமிகு தேரில் ஆரோகணித்து அம்பாள் வெளிவீதி வலம் வந்து அருள்பாலிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

ஆலயத்திலிருந்து புறப்படும் தேர், அல்பர்ட் பீரீஸ் மாவத்தை, பரணவத்தை, கெரவலப்பிட்டிய அதிவேக வீதி சந்தி வரை சென்று கெரவலப்பிட்டி 20 அடி வீதி சாந்தி வீதி, பங்களாவத்தை சாந்தி வீதி, எட்டபலம்வத்தை வழியாக மீண்டும் ஆலயத்தை வந்தடையும். எதிர்வரும் 10 ஆம் திகதி பால்குடபவனியும் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 5 மணிக்கு திருவூஞ்வல் திருவிழாவும் பூங்காவனமும் நடைபெறும். 12 ஆம் திகதி மாலை 6 மணிக்கு வைரவர் மடை இடம்பெறும்.

# கலாநிதி பட்டம் வழங்கி கௌரவம்



களுத்துறை சுழற்சி நிருபர்
நா. ஜெயரட்னம்

களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவாகமரத்ன, சிவஞான சுடர், கிரியாக்ரம ஜோதி, ஈசான்ய சிவாச்சாரியார் சிவ ஸ்ரீ. சிவம்.ஸ்ரீ சுதர்சன சர்மா குருக்கள் அண்மையில் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்த கௌரவ கலாநிதி பட்டம், சைவ சித்தாந்தம் மற்றும் ஆகம கிரியைகள் தொடர்பில் மொறட்டுவ பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் கலாநிதி சரத் சில்வாவினால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம், நல்லூரில் 1981ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் பிறந்த கலாநிதி ஸ்ரீ சுதர்சன சர்மா குருக்கள் ஆரம்ப கல்வியை கொழும்பு வெஸ்லி கல்லூரியிலும் அதன் பின்னர் தமிழ்நாட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கலைமாமணி பட்டத்தையும் பெற்றார். மேலும் அகில இலங்கைக்கான சமாதான நீதவானும், ஸ்ரீ தர்மா பவுண்டேஷன் ஸ்தாபகரும், தலைவர் மற்றும் பொதுச் செயலாளருமான இவர் ஏழை பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும், பிரதேச அறநெறி பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், சிறு கைத்தொழில் மற்றும் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் பல்வேறு உதவிகளையும் சமூக நற்பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

# அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19623) புதிய வீட்டிற்கு குடித்தனம் போகக் கூடாத மாதங்கள் எவை?** ஆடி, மார்கழி, புரட்டாசி, மாசி, பங்குனி, ஆனி

**19624) ஆடி, மார்கழி, புரட்டாசி, மாசி, பங்குனி, ஆனி மாதங்களில் ஏன் போகக் கூடாது?**

**19625) ஆடி மாதத்தில் என்ன நடந்தது?** இராவண சம்ஹாரம்

**19626) மார்கழி மாதத்தில் என்ன நடந்தது ?** பாரதபோர்

**19627) புரட்டாசி மாதத்தில் என்ன நடந்தது?** இரணிய சம்ஹாரம்

**19628) மாசி மாதம் என்ன நடந்தது?** பரமசிவன் ஆலகால விஷம் அருந்தியது

**19629) பங்குனி மாதத்தில் என்ன நடந்தது?** மன்மதனை சிவபெருமான் நெற்றிக் கண்ணால் எரித்த சம்பவம்

**19630) மகாபலிச் சக்கரவர்த்தி தனது ராஜாங்கத்தை இழந்து பாதாளத்துக்கு போன சம்பவம் எந்த மாதத்தில் நடந்தது?** ஆனி மாதத்தில்

**19631) இந்த மாதங்களில் இருக்கின்ற இடத்தை விட்டு குடிபோனால் என்ன நடக்கும்?** அந்த குடும்பம் துன்பமும் துயரமும் அடையும்.

# 52 ஆண்டுகால வரலாற்றை கொண்ட பொரளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்

கொழும்பு 08, பேஸ் லைன் வீதி, பொரளை சந்தியின் சந்தைக்கு அருகில் உள்ள அமைந்துள்ளது 66ஆம் இலக்க தோட்டம். இந்த தோட்டத்தில் 66ஆம் ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம். இந்த ஆலயம் இங்கு அமைக்கப்பட்டு 52 வருடங்களாகின்றன. இவ்வாலயத்தில் செவ்வாய், வெள்ளி தோறும் பூஜைகள் நடத்தப்படுவதுடன் வருடாந்த திருவிழாவும் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்த வருடாந்த தேர்த்திருவிழாவின் போது அம்பாள் வண்ணமிகு தேரில் ஆரோகணித்து வெளிவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். இவ்வாலயத்தில் தேர்த்திருவிழா நடைபெறும் போது பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படுவதுடன் இந்த வருடாந்த உற்சவம் நடைபெறுகின்றபோது இப்பகுதியில் உள்ள பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகளும் மேடையேற்றப்படும்.

இங்குள்ள இளைஞர்கள் 52 ஆண்டுகளுக்கு முன் உதைப்பந்தாட்டம் விளையாடுவதில் மிகவும் ஆர்வமாக இருந்தார்கள். இவர்கள் உதைப்பந்தாட்டம் விளையாடுவதற்கு ஒன்று கூடுகின்ற இடம் தான் இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ள இடம். இவ்வாறு உதைப்பந்தாட்டம் விளையாட ஒன்று கூடியவர்களின் எண்ணத்தில் இங்கு ஒரு ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதன்பயனாக ஆரம்பத்தில் சூலாயுதம் ஒன்று வைத்து வணங்கி வந்தார்கள். காலப்போக்கில் அம்மன் சிலையை கொண்டு வந்து வைத்து வழிபடத் தொடங்கினார்கள்.

இந்த பகுதியிலே பௌத்தா்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், இந்துக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்த, வாழ்ந்து வருகின்ற ஒரு பிரதேசமாகும். எனவே இவ்வாலயத்தில் திருவிழா நடைபெறுகின்றபோது அனைவரும் உதவி ஒத்துழைப்புகள் வழங்கத் தவறுவது இல்லை.

இந்த ஆலயம் பொரளை சந்தியில் சந்தைக்கு அருகில் அமைந்துள்ளதால் சந்தையிலுள்ள வர்த்தகர்களும் வியாபாரிகளும் இவ்வாலய உற்சவசத்துக்கு நிதியுதவிகளும் பொருள் உதவிகளும் வழங்கி வந்தார்கள்.

இவ்வாறு ஆலயம் அமைக்கப்பட்டதும் காலப்போக்கில் இங்கு நிர்வாக சபையொன்று அமைக்கப்பட்டு அந்த நிர்வாக சபையின் பரிபாலத்தின் கீழ் பூசைகள், வருடாந்த உற்சவங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.







பாணந்துறை அருள்மிகு கந்தசாமி கோவில் மஹோற்சவ தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது . ஆலய மஹோற்சவ குருக்கள் "கிரியா க்ரம ஜோதி" சிவஸ்ரீ இலக்ஷ்மிகாந்த ஜெகதீசக் குருக்கள் பூசை வழிபாடுகளை செய்தார். வசந்த மண்டப பூஜையை அடுத்து வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப்பெருமான் தேரில் புறப்பட்டு மங்கள வாத்தியங்கள் முழங்க வீதி வலம் வருவதை காணலாம்.

### கோடீஸ்வர வர்த்தகரின் வீட்டிலிருந்து

# மாணிக்கக் கல், தங்க ஆபரணங்கள் திருட்டு; சுமார் 35 கோடி பெறுமதி

*லோரன்ஸ் செல்வநாயகம்*

வெளிநாடுகளுடன் நேரடியான தொடர்புகளை மேற்கொண்டு ஆடைகளை ஏற்றுமதிசெய்யும் கோடீஸ்வரர் ஒருவருக்கு சொந்தமான மீகொடையிலுள்ள வீட்டிலிருந்து 35 கோடி பெறுமதியான நீல மாணிக்கக் கல் மற்றும் பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களவாடப்பட்டுள்ள பொருட்களில் 35 கரட் நீல மாணிக்கக் கல், 15 இலட்சம் ரூபா பெறுமதியான ரொலக்ஸ் ரக கைக்கடிகாரம், டைடன் ரக பெண்கள் அணியும் கைக்கடிகாரம் உள்ளிட்ட கைக்கடிகாரங்கள், 6 தங்க மோதிரங்கள், 8.5 இலட்சம் ரூபா பெறுமதியான மேலும் நகைகள் 2100 டொலர் பெறுமதியான அமெரிக்கன் மற்றும் சிங்கப்பூர் டொலர்கள் ஆகியனவும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஹங்வெல்ல பகுதி வீடொன்றிலிருந்து தங்க ஆபரணம் மற்றும் துப்பாக்கியும் திருட்டு

*லோரன்ஸ் செல்வநாயகம்*

ஹங்வெல்ல பிரதேசத்தில் ஹல்பே தோட்ட அதிகாரியின் உத்தியோகபூர்வ வீட்டை உடைத்து சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் மற்றும் துப்பாக்கியொன்றும் களவாடப்பட்டுள்ளதாக ஹங்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கியுடன் 5 துப்பாக்கி ரவைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும் மேற்படி சம்பவம் இடம்பெற்ற போது குறித்த தோட்ட அதிகாரி அவரது குடும்பத்தினர் விடுமுறையில் சென்றிருந்ததாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அந்த தோட்டத்தின் பாதுகாப்பு அதிகாரி நித்திரையிலிருந்த சமயம் வீட்டின் ஜன்னல் உடைக்கப்பட்டு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த மேற்படி தங்க ஆபரணமும் துப்பாக்கியும் களவாடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹங்வெல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அது தொடர்பான மேலதிகமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கலாநிதி எம்.ஐ.எம். அமீன் எழுதிய நூல்களின் அறிமுக விழா

கலாநிதி எம்.ஐ.எம். அமீன் எழுதிய "இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள்" மற்றும் "இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் அறிஞர் சித்தி லெப்பை" ஆகிய இரு நூல்களின் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 4.00 மணிக்கு தெஹிவளை, களுபோவில ஸ்ரீ சரனங்கர மாவத்தையிலுள்ள 'பாத்' கம்லெக்ஸ் கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நூல் அறிமுக உரைகளை ஜாமியா நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) மற்றும் கொழும்பு பல்கலைக்கழக அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என். கபூர்தீன் ஆகியோர் நிகழ்த்துவர். இந்நிகழ்வில் விருப்பமானவர்கள் பங்கேற்க முடியுமென விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## 16 மாவட்டங்களுக்கு...

நாட்டில் மேல், தென், மத்திய மாகாணங்கள் உட்பட ஆறு மாகாணங்களில் காற்றுடன் கூடிய மழை பெய்யும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. அதை வேளை, ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 16 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மன்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று தெரிவித்தது. அந்த வகையில் பதுளை, காலி, கேகாலை, குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதிகளில் கடந்த 24 மணித்தியாலத்தில் 75 மில்லி மீற்றருக்கு அதிகமான மழை வீழ்ச்சி காணப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. அந்த வகையில் மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மேற்படி 16 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வசிக்கும் மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதில் முக்கிய கவனம் செலுத்துமாறும் அந்த நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது. அதேவேளை மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. மேல் மாகாணம் மற்றும் தென்மாகாண கடற்குதிகளிலும் மலையக பிரதேசங்களிலும் பலத்த காற்றுடனான மழை வீழ்ச்சி இடம்பெறும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

## யானை தாக்கி...

சிலர் ஈடுபட்டு நிலையில் முன்னாள் தபால் ஊழியரான 58 வயதான அப்துல் லத்தீப் அன்வர் என்பவர் யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். மேலும் சில வீடுகளுக்கு சேதம் ஏற்படுத்தி விட்டு ஒரு வீட்டை உடைத்து நெல் மூடைகள் சிலவற்றை சேதப்படுத்தி விட்டு சென்றுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

## இந்திய ரூபாவில்...

நிர்வாகத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அதிகாரியான பிரமோத் குமார் மிஸ்ரா, இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவை புதுடெல்லியில் சந்தித்து, கடன் மறுசீரமைப்பு உட்பட பல விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பு இலங்கையின் பொருளாதார மீட்சியில் முக்கிய பங்கு வகிக்கும் என்பதை இலங்கை உயர்ஸ்தானிகர் வலியுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பின் ஊடாக இலங்கையில் இந்திய முதலீடுகள், மற்றும் சுற்றுலாத்துறை மேம்படுத்துதல், இருதரப்பு வர்த்தகத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் என்பன தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையின் பல வங்கிகள் வொஸ்ட்ரோ கணக்குகள் எனப்படும் சிறப்பு ரூபாய் வர்த்தக கணக்குகளை திறந்துள்ளன. இதன்படி, இலங்கைப் பிரஜைகள் தற்போது 10 ஆயிரம் இந்திய ரூபாய்களை வைத்திருக்க முடியும்.

அத்துடன் இந்திய தரப்பினர்களுடனான பரிவர்த்தனைகளுக்கு அமெரிக்க டொலர்களுக்குப் பதிலாக இந்திய ரூபாயைப் பயன்படுத்தலாம் என்ற விடயம் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும் என இந்திய அதிகாரி பிரமோத் குமார் மிஸ்ரா மற்றும் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட ஆகியோர் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

## வைத்தியசாலையில்...

அதிகாரிகள் மேற்கொண்ட நீண்ட விசாரணையின் பின்னர், நேற்று முன்தினம் (06) சந்தேகநபர்கள் அறுவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கொரோனா தொற்றால்...

நாயகத்தினால் நேற்று முன்தினம் (6) வெளியிடப்பட்ட கொவிட் மரண அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் 8 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு புறநகரில்...

மணி முதல் இரவு 8.00 மணி வரை நீர் விநியோகம் தடைப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை மின்சார தனியார் நிறுவனத்தினால் (LECO) மேற்கொள்ளப்படும் பராமரிப்புப் பணிகள் காரணமாக கொலன்னாவ நீரேற்று நிலையத்தின் மின்சார விநியோகம் இடைநிறுத்தப்படுவதாக சபை அறிவித்துள்ளது. கொலன்னாவ நகரசபை பகுதி, மொரகஸ்முல்ல, ராஜகிரிய, ஒபேசேகரபுர, பண்டாரநாயக்கபுர, அத்துல்கோட்டே, நாவல, கொஸ்வத்தை மற்றும் ராஜகிரியவில் இருந்து நாவல திறந்த பல்கலைக்கழகம் வரையான பிரதான வீதி மற்றும் அதனுடன் இணைந்த அனைத்து வீதிகளிலும் நீர் விநியோகம் தடைப்படவுள்ளது. நீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், தேவைக்கு ஏற்ப தற்காலிகமாக நீரைச் சேகரிக்குமாறு பிரதேச வாசிகளிடம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கோரியுள்ளது.

## கடன் மறுசீரமைப்புக்கு...

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநர் சபையின் 56 ஆவது வருடாந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜப்பானிய நிதியமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## கடலில் மூழ்கி...

கறுப்பங்கேணி விபுலானந்தா வித்தியாலயத்தில் இம்முறை சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவர்கள் என கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர்கள் கறுப்பங்கேணியை சேர்ந்த டானியல் றோகித் (16வயது), இருதயபுரத்தினை சேர்ந்த நிரோசன் பிரவீன் (16வயது) ஆகியோர் என உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் மாலை இவர்கள் வீட்டிலிருந்து சென்று குறித்த கடற்பகுதியில் குளித்துக்கொண்டிருக்கும் போது அலையில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மரண விசாரணையை தொடர்ந்து சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைகளுக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது. குறித்த இளைஞர்கள் மரணமான சம்பவம் மட்டக்களப்பில் சோகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

## துறைமுகம் மூலம் முன்னெடுக்கப்படும் ...

எழுத்து மூல அறிவிப்பு மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வாறான நடவடிக்கைகள் இலங்கையில் பதிவுசெய்யப்பட்டு நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்தது.அந்தவகையில் முறைகேடான வர்த்தகங்கள் பல இவ்வாறு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மோசடியான நடவடிக்கைகளை மேற்கொண்டு போலி ஆவணங்களை தயாரித்து இவ்வாறு ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ள நான்கு கொள்கலன்கள் தொடர்பில் சுங்கத் திணைக்கள புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதில் இரண்டு கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்திலேயே இப்போதும் காணப்படுவதுடன் மேலும் இரண்டு கொள்கலன்கள் வெ ளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு விட்டதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதியுடனான...

11ம் 12ம் 13ம் திகதிகளில் வடக்கு தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி அழைத்து அதிகாரப்பரவலாக்கல் , வடக்கிலுள்ள பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாட அழைப்பு விடுத்துள்ளார். தமிழர் தாயகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கருதப்படுவதால் அதிகாரப்பரவல் வடக்கு கிழக்கைச் சார்ந்தது. அந்த வகையில் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட வேண்டும். கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படாதவிடத்து குறித்த பேச்சுவார்த்தையைப் புறக்கணிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக எதிர்பார்த்துள்ளோம். இதேவேளை கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைக்க வேண்டுமென பிரதான கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைக்கின்றோம் என்றார். மேலும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்த மாதம் புதிய யாப்பு உருவாக்கப்படும். இந்த கூட்டத்தில் கட்சியின் யாப்பு மற்றும் மாவட்ட மட்ட செயற்பாடு பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது.

## வங்காள விரிகுடாவில்...

இதன் காரணமாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பாதிப்பு இல்லை என்று யாழ் பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா. பிரதீீராஜா தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, வங்காள விரிகுடாவில் இலங்கை தென் கிழக்கே புதிய காற்றழுத்த தாழ்வுநிலை இன்று உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை யாழிற்கு கிழக்காக வங்காள விரிகுடாவில் காற்றுச் சுழற்சி ஒன்றும் காணப்படுகிறது. இது வட, கிழக்குத் திசை நோக்கி நகர்ந்து ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாக சிலவேளைகளில் புயலாகவும் மாற்றம் பெறலாம். அவ்வாறு புயலாக மாற்றம் பெற்றால் 'மொச்சா' என்று பெயர் சூட்டப்படும்.

## இந்தியாவுக்கான விமானம்...

பெதுவாக அனைத்து விமானங்களுக்கும் இதுபோன்ற பாதுகாப்பு அதிகாரியொருவர் விமானப் பயணிகளினதும் பணியாளர்களினதும் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்படுவது வழக்கமாக இடம்பெறும் ஒன்றே என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் குறித்த பாதுகாப்பு அதிகாரி விமானத்திற்கு வெளியே செல்ல வேண்டுமானால் அந்ததுப்பாக்கியை விமானத்திலுள்ள பொறுப்புள்ள அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டே வெளியில் செல்லவேண்டும்.

எனினும் இந்த இந்திய விமானத்தின் பாதுகாப்பு அதிகாரி இந்தியாவின் விசேட பாதுகாப்பு செயலணி அதிகாரியென்றும் அவர் அவரது துப்பாக்கியை தமது வசம் வைத்திருந்ததாகவும் அந்த விமானத்தின் முக்கிய அதிகாரி கட்டுநாயக்க விமான நிலையத்தின் பிரயாணிகள் முனையத்தில் பிரவேசித்த போது அவரும் அவருடன் அங்கு வந்துள்ளார்.

அதனையடுத்தே கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் அவரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். .

## நோய் அறிகுறி...

தொடர்ந்து பரவிவரும் வைரஸ் காய்ச்சல் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் இந்த காலப்பகுதியில் டெங்கு நோய் மற்றும் இன்புலுவன்ஸா வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. மழையுடனான காலநிலையுடன் டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பை நாங்கள் எதிர்பார்க்கிறோம். தற்போது டெங்கு நோய் அதிகரித்து வருகிறது.

டெங்கு நோய் அறிகுறிகளாக இரண்டு தினங்களுக்கு கடினமான காய்ச்சல், இருமல், தொண்டை வலி, உடல் வலி, தலைவலி போன்ற அடையாளங்களையே காண்கிறோம். இரண்டு தினங்களுக்கு அதிக நாட்கள் காய்ச்சல் இருந்தால் டெங்கு பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று இன்புலுவன்ஸா நோயும் அதிகரித்துச் செல்கிறது. அதன் அறிகுறிகளாக காய்ச்சலும் இருமல், தடிமல், ஒரு சிலருக்கு வாந்தி ஏற்படுவது போன்ற அறிகுறிகளை காணலாம்.

இந்த நோயுடைய சில சிறுவர்கள் மயக்கமடைந்து விழுவார்கள். அதேநேரம் வீடுகளில் மிக விரைவாக இந்த நோய் பரவுவதாக கண்டால், அது இன்புலுவன்ஸா வைரஸாகும்.

இவ்வாறான நோய் அறிகுறி இருப்பவர்கள் முகக்கவசம் அணிந்துகொள்ள வேண்டும். அதிக மக்கள் நடமாடும் இடங்களுக்குச் செல்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன், இந்த நோய் அறிகுறி இருக்கும் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பவேண்டாம். அவர்களை முடியுமான வரையில் ஓய்வாக இருக்கச்செய்ய வேண்டும் என்றார்.

## அரசாங்க ஊழியர்களின்...

அதிகரிக்கப்படும் போது அதன் பிரதிபலன்கள் பொதுமக்களுக்கும் கிட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர் நாடு தற்போது வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வருகிறது. இந்த நிலையில் அதன் பிரதிபலன்கள் மக்களையே வந்து சேரும் அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே தெளிவாக குறிப்பிட்டுள்ளார். அந்தவகையில் நாட்டின் பொருளாதாரம் மீள கட்டியெழுப்பப்படும் போது அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

## வெடுக்குநாறிமலைக்கு...

மலையின் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்ட அவர், மலையில் சேதங்களை ஏற்படுத்தியமை தொடர்பாக உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளதாகத் தெரிவித்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை, ஆலயத்தில் நேற்று முன்தினம் இந்து சமயப்பேரவையின் ஏற்பாட்டில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றமையால் ஆலய நிர்வாகத்தினரும் அங்குக் கூடியிருந்தனர். இதன்போது பிரதான காட்டுப் பாதையூடாக ஆலயத்துக்கு வருகை தருவோர் உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி உள்வர வேண்டாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், மழை காரணமாக ஆலய வளாகத்தில் போடப்பட்ட தற்காலிக கொட்டகையையும் உடன் அகற்றுமாறும் நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு ...

வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு போசணைமிக்க பிஸ்கட்டுகளை முதற்கட்டமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த மாதத்தில் இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சீரற்ற காலநிலை...

பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, பதுளை, திருகோணமலை, இரத்தினபுரி, கேகாலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களிலேயே 2178 குடும்பங்களைச் சேர்ந்த 9034 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக 45 வீடுகள் பகுதியாக சேதமடைந்துள்ளதாகவும் நேற்று காலையுடன் நிறைவடைந்துள்ள 24 மணித்தியாலத்தில் 117.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி இடம்பெற்றுள்ளதாகவும் வட பகுதியிலேயே இந்த மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு லாசரஸ் வீதி, ஹுணுப்பிட்டிய கிராமசேவகர் உத்தியோகத்தர் பிரிவு பகுதிகளில் வாய்க்கால்கள் பெருக்கெடுத்ததால் வீடொன்று நீரில் அடித்துச்செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதனால் அந்த சம்பவத்தில் ஒருவர் காணாமற் போயுள்ளதாகவும் அவர் அப்பிரதேசத்தில் வசிக்கும் 60 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையென்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவரைத் தேடும் நடவடிக்கைகளில் கடற்படையினரும் பிரதேசவாசிகளும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அந்தநிலையம் தெரிவித்துள்ளது.

## பசில் ராஜபக்ஷ நேற்று...

தீர்மானித்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய தினம் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த மாதத்திற்குள் மீண்டும் நாடு திரம்பவுள்ளதாக பொதுஜன பெரமுன கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ். பல்கலைக்கழக...

குறித்த வளாகம் புலிகளின் பயன்பாட்டில் இருந்த நிலையில் இராணுவம் கிளிநொச்சியை விடுவித்த பின்னர் தமது முகாமாக மாற்றிக்கொண்டனர். அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கதைத்து அதனை பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொடுத்துள்ளோம்.

அங்கு நான்கைந்து வளாகங்கள் வந்துள்ளன. கிளிநொச்சி வளாகத்தை கிளிநொச்சி பல்கலைக்கழகமாக மாற்றித் தருவோம் என அவர் இதன்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நிலையில் குறித்த பாதிப்புக்கள் ஒப்பந்தங்கள் செய்யப்படும்போது ஏற்படுகின்றது. அதில் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும். அவை நடந்து முடிந்துவிட்டது. இந்திய தூதரகம்தான் ஒப்பந்தக்காரர்களிற்கு அதனை கொடுத்திருக்கும்.

உடைந்த வீடுகள் தொடர்பான படங்கள் தந்தால் அதனை இந்திய தூதரகத்திற்கு அனுப்புவேன். விரைவில் ஜனாதிபதி இந்தியாவிற்கு செல்லவுள்ளார். பிரதமர் மோடிக்கும் அதனை நாங்கள் கொடுக்கலாம். உடனடியாக திருத்தத்திற்கு காசும் தரலாம்.

உங்களுடைய கோரிக்கைகளில் ஒன்று காணியாகும். அந்தந்த பிரதேசத்தில் இருக்கின்றவர்களிற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடு. அதற்கு மேலாக வேறு பிரதேசத்திற்கு கொடுக்க முடியும். புலிக்குளத்திற்கு அருகில் காணி இருப்பதாக சொல்லப்படுகின்றது. அந்த காணி பல்கலைக்கழகத்திற்குரியது என்றெல்லாம் சொல்லப்படுகின்ற போதிலும் பயன்பாட்டில் இல்லை. மேலும் நாட்டின் சூழ்நிலை காரணமாக குறித்த காணியினை விவசாயம் செய்வதற்காக பெற்றுத்தரலாம் என அவர் தெரிவித்தார்.

## ஆழ் கடல் மீன்பிடிப் படகுடன் ஆறு...

குறித்த கடற்பரப்பில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் கடல் மார்க்கமாக பயணித்துக் கொண்டிருந்த ஆழ்கடல் மீன்பிடிப் படகை சோதனையிட்டபோதே அந்த படகில் வெளிநாடு ஒன்றுக்கு தப்பிச் செல்லும் வகையில் பயணித்த ஆறு பேரை கைது செய்ய முடிந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த ஆறு பேரில் படகை செலுத்தியவருடன் வயது முதிர்ந்தவர், பெண்கள் மற்றும் பிள்ளைகளும் உள்ளடங்குவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.இவர்கள் வவுனியா மற்றும் மன்னார் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்றும் சட்ட பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்தற்காக அவர்களை மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

## வடக்கு தமிழ்...

தமிழ் எம்.பிக்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதியுடன் இந்த பேச்சுவார்த்தைகளில் மாவை சேனாதிராஜா தலைமையிலான இலங்கை தமிழரசுக்கட்சி மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன பங்கேற்பதை உறுதி செய்துள்ளன.

## மாவின் விலையில்...

தெரிவித்துள்ளார். கோதுமை மாவின் சில்லறை விலை சிறு தொகையினால் உயர்த்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இறக்குமதி வரி, பெறுமதி சேர் வரி உள்ளிட்ட வரிகளினால் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 20 ரூபாவினால் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## தென்கிழக்கு...

விழா நிகழ்வுகள் பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் வேந்தர் பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் இடம்பெறவுள்ளது. இம்முறை பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் இரண்டு நாட்களுக்கு ஐந்து அமர்வுகளாக நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளன. முதல் அமர்வில் கலை கலாசார, தொழில்நுட்ப பீடங்களைச் சேர்ந்த 395 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இரண்டாவது அமர்வில் முகாமைத்துவ – வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த 371 மாணவர்களும், மூன்றாவது அமர்வில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 380 மாணவர்களும் பட்டங்களை பெறவுள்ளனர்.

## முல்லைத்தீவிலிருந்து...

மூன்று ஆண்குழந்தை ஒரு பெண் குழந்தை உட்பட 10 பேர் முல்லைத் தீவு கடற்கரையில் இருந்து நேற்று இரவு பைபர் படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அடுத்துள்ள முதல் மணல் திட்டிற்கு சென்றுள்ளனர்.

இலங்கை தமிழர்கள் மணல் திட்டில் காத்திருப்பதை கண்ட அப்பகுதியில் மீன் பிடித்த நாட்டுப்படகு மீனவர்கள் மரைன் பொலிஸ் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

## சீன, அமெரிக்க...

உரிமையாளர்கள் உள்ளிட்ட தரப்பினருடன் வியாழக்கிழமை (04) கொழும்பு மன்றக்கல்லூரியில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர மற்றும் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த ஆகியோர் மேற்குறிப்பிட்ட விடயங்களைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது : நாட்டில் நிறுவப்படவுள்ள 450 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் தலா 150 என மூன்றாகப் பிரிக்கப்பட்டு புதிய வெளிநாட்டு எரிபொருள் விநியோகத்தர்களுக்கு வழங்கப்படும். ஒரு மாதத்திற்குள் புதிய விநியோகத்தர்கள் இலங்கையில் அவர்களின் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

அதற்கமைய புதிய விநியோகத்தர்களுக்கான சந்தைப்படுத்தல் பிரதிநிதிகளை ஒதுக்குவது, பயன்படுத்தப்படவுள்ள இயந்திரங்களை வகைப்படுத்துவது, புதிய உடன்படிக்கைகள், விலை சூத்திரம், புதிய விநியோகத்தர்களுக்கான நன்மைகள், சந்தைப்படுத்தல் பிரதிநிதிகளுக்கு கிடைக்கும் வருமானம், அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் விதிமுறைகள் தொடர்பாக இந்த சந்திப்பின் போது ஆராயப்பட்டது. இதேவேளை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினருடனும் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்த சந்திப்பில் எரிபொருள் விலை சூத்திரம், புதிய எரிபொருள் நிலையங்களை நிறுவுதல், எரிபொருள் விநியோகம், எண்ணெய் தாங்கி களஞ்சியசாலை வசதிகளை விரிவாக்கம் செய்தல் குறித்து கலந்துரையாடப்பட்டது.

சியம்பலாகஸ்கொட்டுவ

# மதீனா தேசிய பாடசாலையில் கல்வி அமைச்சின் நோன்பு பெருநாள் கலாசார விழா

**கல்வி அமைச்சின் அழகியல் மற்றும் சமய கலாசாரப் பிரிவின் ஏற்பாடு**

















பாடசாலை மாணவர்கள் தத்தம் சமய ஒழுக்க மாண்புகளையும் கலாசாரப் பண்பாடுகளையும் தமது வாழ்க்கையிலும் நடத்தையிலும் கடைபிடிக்க வேண்டும். அத்தோடு ஏனைய சமய, கலாசார விழுமியங்களையும் அறிந்து கொண்டு சிறந்த கல்விப் பெறுபேறுகளை அடைய வேண்டும் என்று கல்வி அமைச்சின் அழகியல் மற்றும் சமய கலாசாரப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி நிசாந்த ஹென்துன் பத்திரன தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய நோன்புப் பெருநாள் கலாசார விழா குருநாகல் சியம்பலாகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ். எம். ஹைதர் அலி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சின் அழகியல் மற்றும் சமய கலாசாரப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி நிசாந்த ஹென்துன் பத்திரன, கௌரவ அதிதியாக கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் என். டி நசுமுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது கலாநிதி நிசாந்த ஹென்துன் பத்திரன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்

இலங்கையின் முதல் தடவையாக கல்வி அமைச்சினால் நடத்தப்படும் நோன்புப் பெருநாள் தேசிய விழாவில் கலந்து கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

கல்வி அமைச்சின் மூலம் சமய விவகாரங்கள் தொடர்பில் சகல பாடசாலை மாணவர்களுக்கு தெளிவூட்டல்களை மேற்கொள்ளுகின்ற செயற்திட்டத்தின் கீழ் தேசிய நோன்புப் பெருநாள் பண்டிகை விழாவை முதன் முறையாக இப்பாடசாலையில் நடத்துகின்றோம். சமீபத்தில் சித்திரைப் புத்தாண்டு விழாவை நடத்தினோம். சிங்கள மொழிப் பாடலில் ரமழானின் சிறப்பை மிக அழகாக நாங்கள் கேட்டு இருக்கின்றோம். எமது நாட்டின் பிரபல்யமான பாடகர் மொஹிதீன் பேக் சிங்கள மொழி மூலத்திலும் சிங்கள சமய பக்தி கீதங்களையும் பாடியுள்ளார்.

நாங்கள் எல்லோரும் பொதுவாக ஒன்றுபட்டவர்கள். சமயங்கள் நல்ல கருத்துக்களையே போதிக்கின்றன. இது சமய, கலாசார வேலைத் திட்டம் ஆகும். இங்கு சிங்கள, கிறிஸ்தவ சமயத் தலைவர்கள் ரழமானின் சிறப்பையும் அத

**மாவத்தகம தினகரன் நிருபர்...**

னுடைய மகிமை குறித்து சிறப்பாக உரையாற்றினார்கள்.

பாடசாலை மாணவர்கள் தத்தமது கலை, கலாசாரப் பண்பாட்டு அம்சங்களை மேடையேற்றி வெளிக்கொணர்வதற்கும் பிற சமூக சமயத்தவர்கள் அதைப் பற்றி அறிந்து கொள்ளும் நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டம் இது.

இந்தியாவில் கலாநிதி பட்டப் படிப்பை மேற்கொள்ளுகின்ற போது பல்லின இன மக்களுடைய கலாசாரப் பண்பாட்டு அம்சங்களை நான் அறிந்து கொண்டோம். வெசாக், பொசன் போன்றவையும் அவ்வாறு அமைந்துள்ளன.

நோன்பு காலத்தில் நாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய முன்மாதிரியான அம்சங்களை நாங்கள் விளங்கிக் கொண்டோம். அழகியல் கலைத் துறையிலும் பாடசாலைப் பிள்ளைகள் நாட்டம் கொண்டு தங்களுடைய உயர் கல்வியை மேற்கொள்வதுமென்மேலும் நல்ல சிறப்பாக அமையும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் தேசிய நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்தை இலங்கை வரலாற்றில் சியம்பலாகஸ் கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையில் முதன் முறையாக கொண்டாடப்படுவது என்பது பெருமைக்குரிய விடயமாகும்.. இந்த ஏற்பாட்டினைச் செய்வதற்கு ஆலோசனை வழங்கிய கல்வி அமைச்சின் செயலாளருக்கு எங்களது முதல் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன் என்று கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் என். டி நசுமுதீன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்

இப்பாடசாலை வடமேல் மாகாணத்தில் இருக்கின்ற மிகவும் சிறந்த ஒரு முன்னணிப் பாடசாலையாகும்.

2019 ஏப்ரல் மாதம் எங்களுக்கொரு கசப்பான தினம். இத்தினத்தினால் பல்வேறு துன்பங்களையும் சவால்களையும் எதிர்நோக்கினோம். நாங்கள் இன்னும் சந்தேகங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

அவற்றை நீக்குவதற்காக சியம்பலாகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையில் நடைபெறும் இந்த நிகழ்வு இன்றிலிருந்து அந்தக் கறையை இல்லாமற் செய்யும் என்று நான் நம்புகின்றேன்.

ஏப்ரல் மாதம் தமிழ்,சிங்கள புதுவருடக் கொண்டாட்டம் இடம்பெற்றது. எமது புனித நோன்பு முடிவுற்று நோன்புப் பெருநாளைக் கொண்டாடினோம். கிறிஸ்தவ சகோதரர்கள் உயிர்த்த ஞாயிறு தினத்தை அனுஷ்டித்தார்கள். ஆகவே இலங்கையில் சித்திரை மாதம் என்பது மிகவும் விசேட மாதமாக இருக்கிறது. இத்தகைய தினங்களுக்கு தேசிய முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

இதில் கல்வி அமைச்சின் ஆசிரியர் இடமாற்றப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் எம். ஆர். எம். இர்சான், பௌத்த கிறிஸ்தவ சமயப் பெரியார்கள், ஜம்மிய்யதுல் உலமா சபை, பள்ளிவாசல் நிர்வாகிகள், பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவ மாணவிகளின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.











மாத்தளை ஆமினா மகளிர் தேசிய பாடசாலைக்கு புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி ஜெ.எல்.எம். பவாயிதா தனது கடமைகளை அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்டார். அதிபராக இப்படசாலையில் சேவையாற்றிய எச்.எல். சிராஜுதீன் கடந்த மாதம் 27ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்து இப்பாடசாலையில் பிரதி அதிபராக நீண்ட காலமாக சேவையாற்றி வந்த திருமதி ஜெ.எல்.எம். பவாயிதா பதவி வெற்றிடத்திற்கு அதிபராக கல்வி காரியாலயத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

(படங்கள்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# கிழக்கின் குரல்



# தென்கிழக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்களை சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடு

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதினைந்தாவது பொதுப் பட்டமளிப்பு விழா, எதிர்வரும் மே மாதம் 13,14 ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் வேந்தர் பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் இடம்பெறவுள்ளன. இவ்விழாக்கள் இம்முறை இரு தினங்களில் ஐந்து அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

முதல் அமர்வில் கலை, கலாசார, தொழினுட்ப பீடங்களைச் சேர்ந்த 395 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இரண்டாவது அமர்வில் முகாமைத்துவ – வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த 371 மாணவர்களும், மூன்றாவது அமர்வில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 380 மாணவர்களும் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

இரண்டாம் நாள் அமர்வில் (நான்காவது அமர்வில்) பிரயோக விஞ்ஞானங்கள், பொறியியல் ஆகிய பீடங்களைச் சேர்ந்த 332 மாணவர்கள் பட்டங்கள் பெறவுள்ளனர். ஐந்தாவது அமர்வில் கலை கலாசார, முகாமைத்துவ வர்த்தக பீடங்களில் இணைந்து கல்வி கற்ற 374 வெளிவாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம், வியாபார நிருவாகம், முகாமைத்துவம், தமிழ் உள்ளிட்ட துறைகளில் பட்டப்பின்படிப்புக்களை நிறைவு செய்த மாணவர்களுக்கான முதுமாணி, முதுதத்துவமாணி பட்டங்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நாட்டில் நிலவுகின்ற கொவிட்19 அசாதாரண சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு, பட்டமளிப்பு விழா நிகழ்வுகளை சுகாதார வழிகாட்டலுக்கமைய நடத்துவதற்கு பல்கலைக்கழக நிருவாகம் தீர்மானித்துள்ளது.

# ஏறாவூரில் முதல் தடவையாக புத்தகக் கண்காட்சி, பலர் பங்கேற்பு

ஏறாவூர் நிருபர் நாஸர்

ஏறாவூர் நகர சபையும் வாசிப்பு வட்டமும் இணைந்து தேசிய புத்தக சந்தையை நடாத்துகிறது.

ஏறாவூர் பிரதேச வரலாற்றில் முதல் தடவையாக தேசிய மட்டத்திலான புத்தகக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் நகர சபையின் செயலாளரும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருமான எம்.எச்.எம். ஹமீம் தெரிவித்துள்ளார். ஏறாவூர் வாவிக்கரையிலுள்ள டாக்டர் அஹமட் பரீட் பொதுமைதானத்தில் எதிர்வரும் (14) வரை தொடர்ந்து 14 நாட்கள் இப்புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இதில்,நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த நூல் நிலைய உரிமையாளர்கள் புத்தகங்களைக் காட்சிப்படுத்தியுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள், கலைஞர்கள் மற்றும் வாசிப்பு ஆர்வலர்கள் போன்றவர்கள் பயன்பெறும் வகையில் இப்புத்தகக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் நகர சபையின் செயலாளரும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருமான எம்.எச்.எம். ஹமீம் தலைமையில் சர்வமத ஆசியுடன் இக்கண்காட்சி ஆரம்பமானது. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத், பிரதேச முக்கியஸ்தர்கள், உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் மற்றும் வாசிப்பு ஆர்வலர்கள் எனப் பலர் பிரசன்னமாயிருந்தனர்.

# புல்மோட்டை பகுதியில் யானை தாக்கி வயோதிபரொருவர் உயிரிழப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை புல்மோட்டை பகுதியில், யானை தாக்கியதில் வயோதிபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று (07) இடம்பெற்றது.

திருகோணமலை புல்மோட்டை 04 ஜின்னா நகரில் யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக நிலவிய நிலையில், நேற்று (07) அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்த யானை அட்டகாசத்தில் ஈடுபட்டது. வீடுகளைச் சேதப்படுத்திய இந்த யானை, அங்கிருந்த நெல் மூட்டைகள் சிலதையும் தின்று தீர்த்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைத் தடுப்பதற்காக சிலர் ஈடுபட்டனர். இந்நிலையிலே முன்னாள் தபால் ஊழியரான அப்துல்லத்தீப் அன்வர் (58வயது) யானையின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார்.

# பொதுச்சத்திர சிகிச்சை நிபுணராக டாக்டர் அகிலன் நியமனம்

காரைதீவு குறூப் நிருபர்



சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பொதுச் சத்திர சிகிச்சை நிபுணராக டாக்டர் நடேசன் அகிலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

காரைதீவைச் சேர்ந்த டாக்டர் அகிலன் கடந்த (27) இல், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஆஷாத் முன்னிலையில் தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

காரைதீவு .1 விபுலானந்த வீதியில் வசிக்கும் வைத்திய அதிகாரி டாக்டர் நடேசன் அகிலன் மற்றும் வைத்திய அதிகாரி டாக்டர் நடேசன் பகீரதன் ஆகிய உடன்பிறந்த சகோதரர்கள் இருவர், ஒரே வேளையில் இம் மருத்துவ முதுமாணிப் பட்டம் பெற்று சாதனை படைத்திருந்தனர்.

வரலாற்றில் முதல் தடவையாக சகோதரர் இருவர் முதல் தடவையாக சத்திர சிகிச்சை நிபுணர்களாக தெரிவாகியிருந்தமை வரலாற்றில் முக்கிய மைல்கல் ஆகும்.

சாதனை படைத்த மேற்படி இரு சகோதரர்களின் மற்றும் ஒரு சகோதரன் பொறியியலாளராகவும், ஒரு சகோதரி மிருகவைத்திய அதிகாரியாகவும், மற்றுமொரு சகோதரி பிரபல பல் வைத்திய அதிகாரி டாக்டர் த.உமாசங்கரின் மனைவியுமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஊடகவியலளர்களுக்கு செயலமர்வு



வெல்லாவெளி தினகரன் நிருபர்

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலளர்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு கிழக்கு சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கூட்டுறவு மண்டபத்தில் சனிக்கிழமை (06) பிற்பகல் இடம்பெற்றது.

பயங்கரவாதச் சட்டத்துக்கு எதிரான கருத்துக்கள் நாட்டில் நிலவியதையடுத்து, அரசாங்கம் புதிதாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவரவுள்ளது. இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள், சமூக வலைத்தள செயற்பாட்டாளர்கள் மற்றும் இணையத்தள செய்தியாளர்களுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பற்றியும், அதிலுள்ள குறைபாடுகள் தொடர்பிலும் விரிவாக தெளிவூட்டப்பட்டது.

கிழக்கு சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.எல்.ஏ.புகாரி தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில், சட்டத்தரணிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் சட்டத்தரணி சுபஸ்திகா வளவாளராகக் கலந்துகொண்டு தெளிவுரையாற்றினர்.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியாளர்கள் மற்றும் சமூக வலைதள செயற்பட்டளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# திருக்கோவில் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



சாய்ந்தமருது விசேட நிருபர்

மாணவர்களின் கல்விக்கு வறுமை தடையாக அமையக்கூடாதென்ற நோக்கில், இணைந்த கரங்கள் அமைப்பினால் நாடுதழுவிய ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக அம்பாறை மாவட்ட திருக்கோவில் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் அதிகஷ்ட மற்றும் தொழில் வாய்ப்பற்று குறைந்த வருமானத்தின் கீழ் வாழும் குடும்ப மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கமு/திகோ/ஊறணி சரஸ்வதி மகா வித்தியாலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கும், பொத்துவில் கமு/திகோ/இன்ஸ்பெக்டர் ஏத்தம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை என்பன இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ.கஜரூபன், எஸ்.காந்தன், சி. துலக்சன், மா.ஜெயநாதன், தி.சதிஸ் குமார். ஆகியோரால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், கமு/திகோ/இன்ஸ்பெக்டர் ஏத்தம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் க. சந்திரகாசன் மற்றும் ஆசிரியர் க. கருணாகரன், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கதீப் முஅத்தின்களுக்கு தகாபுல் உதவித் திட்டம்

புதிய காத்தான்குடி விசேட நிருபர்

நாடளாவிய ரீதியில் மஸ்ஜித்களில் கதீப் இமாம் முஅத்தின்களுக்கு நிபந்தனையுடனான மருத்துவக் காப்புறுதி (தகாபுல்) உதவித் திட்டம் ஒன்றுமுகமாகியுள்ளது.

ஸ்ரீலங்கா கதீப் முஅத்தின் நலன்புரி அமைப்பு இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

பத்து வருடங்களுக்குச் செலுத்த வேண்டிய இத்திட்டத்திற்கான முதலீடுகளை 10 வருடங்களுக்கு இந்த நலன்புரி அமைப்பு செலுத்தவுள்ளது.

65 75 வயதுக்கிடையில் உள்ள கதீப்மார், இமாம்கள் மற்றும் முஅத்தின்கள் இத்திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

இத்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் கதீப், இமாம் முஅத்தின்கள் தங்களின் சுய விபரங்களுடன் ஸ்ரீலங்கா கதீப் முஅத்தின் நலன்புரி அமைப்பு 25/7 வினயலங்கார மாவத்த கொழும்பு 10 என்ற விலாசத்திற்கு தபாலில் விண்ணப்பிக்குமாறு அமைப்பின் செயலாளர் மௌலவி கதீப் நாகூர் றஹீம் கேட்டுள்ளார்.

# நிந்தவூரில் வெசாக் நிகழ்வுகள் பொதுமக்களுக்கு அன்னதாம்

நிந்தவூர் குறூப் நிருபர்

நிந்தவூர் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில், நிந்தவூர் பிரதான வீதி நெற்களஞ்சியசாலையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு முன்னால், வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டு அன்னதானங்கள் வழங்கப்பட்டன.

நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ. எல். நஜீப் தலைமையில் இந்நிகழ்வுகள் (06) இடம்பெற்றன.

குறிப்பாக பிரதான வீதியினூடாக பயணிக்கும் பொதுமக்களுக்கும், வயல் வேலைகளுக்குச் சென்று வீடு திரும்பும் விவசாயிகளுக்கும் குளிர்பானங்கள் மற்றும் காலை ஆகாரம் என்பன வழங்கப்பட்டன. இந்த நிகழ்வானது பொதுமக்கள், விவசாயிகள் மத்தியிலும் பாரிய வரவேற்பைப் பெற்றது.

இந்நிகழ்வில் நிந்தவூர் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் பாறுக் இப்றாஹிம், நிந்தவூர் பொலிஸ் நிலைய ஆலோசனைக் குழுவின் தலைவர் ஏ.எம். ரஸீன், நிந்தவூர் அல்மஸ்லம் பாடசாலை அதிபர் இசட். அஹமட், பிர்தௌஸ் ஜும்மா பள்ளிவாசல் பிரதம இமாம் சிம்லி மௌலவி, பீச் வே ஹப் உணவகத்தின் முகாமையாளர் சியான் உள்ளிட்ட சமூக சேவகர்கள், வர்த்தகர்கள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய 48 வர்த்தகர்களுக்கு நீதிமன்றம் அபராதம்

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த, 48 வர்த்தகர்களுக்கு 98 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.நீதிமன்றங்களே இந்த வர்த்தகர்களுக்கு அபராதம் வழங்கித் தீர்ப்பளித்தது.

அக்கரைப்பற்று பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை அம்பாறை, தெஹியத்தக்கண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 86 சுற்றிவளைப்புக்களில்,இவர்களின் மோசடிகள் அம்பலத்துக்கு வந்தன.

இந்தச் சுற்றிவளைப்பில், 48 வர்த்தகர்களுக்கு 98 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஏனைய வர்த்தகர்களுக்கு நீதி மன்றினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.இதையடுத்து,மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் ஆலோசனைக்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இச்சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டனர்.

# விடுமுறை தினங்களில் உல்லாச பயணிகளின் வருகை அதிகரிப்பு,ஹோட்டல் உரிமையாளர்கள் மகிழ்ச்சி

கல்முனை குறூப் நிருபர்



கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறைக்குப் பெயர்போன பொத்துவில் மற்றும் அறுகம்பை பிரதேசங்களில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உல்லாசப் பிரயாணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல், கொரோனா வைரஸ் பரவல் மற்றும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவுகளால் கடந்த காலங்களில் இவர்களின் வருகைகள் குறைந்திருந்தன. தற்போது, படிப்படியாக மீண்டும் சுற்றுலாத் துறையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனாலேயே சுற்றுலாத்துறையில் பிரபல்யமான பொத்துவில் மற்றும் அறுகம்பை பிரதேசங்களில் பயணிகளின் வருகை அதிகரித்ரதுள்ளன.

பொத்துவில் பிரதேசத்தில் உல்லாசத்துறைக்கு மிகவும் பிரசித்தி பெற்ற இடங்களான ஊரணி, பிஸ்கி பொய்ண்ட், கொட்டுக்கல், மண்மலை அறுகம்பை கடற்கரைப் பிரதேசம், குடாக்கல்லி, பாணமை, லாஹுகல புராதனப்பூங்கா மற்றும் குமணை தேசிய பூங்கா போன்ற இடங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகைகள் பெருமளவில் அதிகரித்துள்ளன. இங்குள்ள ஹோட்டல்கள் மற்றும் விடுதிகள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ப்பயணிகளால் நிரம்பி வழிவதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை நோன்புப்பெருநாள் விடுமுறை மற்றும் தமிழ் சிங்களப்புத்தாண்டு கொண்டாட்டங்களையடுத்து உள்ளூர் உல்லாசப் பயணிகளின் வருகையும் பாரியளவில் அதிகரித்துள்ளன.

அதிலும் குறிப்பாக கடந்த மூன்று தினங்கள் வெசாக் தினம் உட்பட சனி மற்றும் ஞாயிறு ஆகிய நீண்ட விடுமுறை தினங்களாக இருந்ததால் சிங்கள பௌத்தர்களிடையே மிகவும் பிரபல்யம்பெற்ற பொத்துவில் முஹுது மகா விகாரையைத் தரிசிக்க பௌத்த யாத்திரிகர்கள் நாட்டின் நாலாபுறத்திலிருந்தும் பெருமளவில் வருகை தந்திருந்தனர்.

இதனால், ஹோட்டல் உரிமையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்

# கதிர்காமத்தில் ஆடிவேல் விழாவிற்கான கன்னிக்கால்

காரைதீவு குறூப் நிருபர்

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்தின் மாங்கல்ய சடங்கு கன்னிக்கால் அல்லது பந்தல் கால் நடும் நிகழ்வு கடந்த (06) சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

கதிர்காம கந்தன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. பழங்கால முறைப்படி நேற்று முன்தினம் மாலை, வெட்டப்பட்ட கம்புகள், மாணிக்க கங்கையில் குளிப்பாட்டப்பட்டு, இரவு வள்ளி அம்பாள் திருக்கோவிலில் வைக்கப்பட்டன.

இதன்படி, நேற்று முதல் 45 நாட்களுக்குப் பின்னர் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த அசல பெரஹெரா ஆடிவேல் திருவிழா ஜூன் (19) ஆரம்பமாகி, ஜூலை (03) மஹா பெரஹெரா இடம்பெற்று, ஜூலை (04) காலை மாணிக்க கங்கையில் நீர் வெட்டும் சடங்குடன் நிறைவடையும்.

## மலைச்சாரல்

# வேன் குடைசாய்ந்து விபத்து



ஹற்றன் நு வரெலியா பிரதான வீதியில் நானுஓயா ரதெல்ல குறுக்கு வீ தியில் வேன் ஒன்று நேற்று முன் தி னம் (6) குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயா ரதெல்ல பிரதேசத்தில் இருந்து நுவரெலியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளையில் வேனில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக சாரதிக்கு வாகனத்தை கட்டுப்படுத்த முடியாத காரணத்தால் பின் நோக்கி சென்றமையால் இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. இதில் பயணித்தவர்கள் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கிறனர். இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஜனவரி மாதம் 20ம் திகதி நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஏழு பேர் உயிரிழந்ததுடன் 51 பேர் படுகாயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மத்துரட்ட ஆற்றில் காணாமல் போன இருவரில், ஒருவரின் சடலம் மீட்பு

மத்துரட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெட்டயாப்பத்தன வடுவா ஆற்றில் குளிக்க சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரன் மற்றும் சகோதரி காணாமல் போயுள்ள நிலையில் சகோதரன் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம் சகோதரி தண்ணீரில் மாயமாகியுள்ளதாகவும் இவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் மத்துரட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 05.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சோக சம்பவத்தில் மத்துரட்ட கெட்டயாபத்தனை கிராமத்தில் வசிக்கும் டப்ளியூ. ஜி. அசேல ஹிதுவர (வயது 12) என்ற சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நிலையில் இரவு 09க்கு சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரத்தில் டப்ளியூ. ஜி. தசுனி ப்ரியங்கா (வயது 13) என்ற சிறுமி தண்ணீரில் மாயமான நிலையில் சிறுமியை தேடும் பணியில் பிரதேச மக்கள் மற்றும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக ரிக்கில்லகஸ்கட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என மத்துரட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மத்துரட்ட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**ஆ.ரமேஸ்**



நாட்டுக் கோட்டை நகரத்தார் அருள்மிகு கம்பளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் சித்திரா பௌர்ணமி விஷேட உற்சவம் அண்மையில் நடைபெற்றது. விநாயகர், ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கு 108 (அஷ்டேரத்ர சத)சங்காபிஷேகம் நடைபெற்ற பின் அன்னதானமும் மாலை வெசாக் பண்டிகையை முன்னிட்டு மாலை 7.00 மணிமுதல் ஆலய வளாகத்தில் சிறப்பு போஜனமும் வழங்கப்பட்டது. (நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

## சிவனொளிபாதமலை யாத்திரை

# பருவகாலம் வெசாக் தினத்துடன் நிறைவு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



சிவனொளிபாதமலை யாத்திரை பருவகாலம் கடந்த டிசம்பர் மாதம் 7 திகதி பௌர்ணமி தினத்தன்று ஆரம்பமாகி (05.05.2023) வைகாசி விசாகம் பௌர்ணமி தினம் இரவுநிறைவடைந்தது.

சிவனொளிபாதமலைக்கு பொறுப்பான பேராசிரியர் பெங்கமுவே தம்மதின்ன தேரர் இது தொடர்பில் மேலும் கூறுகையில்,...

வெசாக் தினமாக 05 ஆம் திகதி சிவனொளிபாதமலையில் வைக்கப்பட்ட சிலைகள் குருவிட்ட எரந்த வழியாகவும், பலாபத்பல வழியாகவும், மலை உச்சியில் இருந்து லக்ஷபான இராணுவ முகாம் இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் இணைந்து சுவாமிகள் மற்றும் பூஜை பொருட்கள், ஆபரணங்கள் அனைத்தையும் பாதுகாப்பாக எடுத்து வந்து நல்லதண்ணி நகரில் உள்ள பௌத்த மண்டபத்தில் வைத்து அங்கு இருந்து வாகனங்கள் மூலம் பாதுகாப்பாக நோட்டன் வழியாகவும், மேலும் மஸ்கெலியா பொகவந்தலாவ வழியாகவும் இரத்தினபுரி கல்பொத்வல ரஜமஹா விகாரையில் பிரதிஷ்டை செய்யப்படது என்றார்.

# தேயிலை தினத்தை முன்னிட்டு தேயிலைக்கு மும்மத ஆராதனை





150 வருடங்களுக்கும் மேலான செழுமையான வரலாற்றைக் கொண்ட இலங்கை தேயிலைக்கு மும்மத மதவழிபாட்டுத் தலங்களில் தேயிலை தொழில் துறையில் ஈடுப்படும் அனைத்து தரப்பினருக்கும் ஆசிர்வாதம் வழங்கும் வருடாந்த தேயிலை திருவிழா நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டது.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரனவின் ஏற்பாட்டில் கொட்டாபலை வரலாற்றுச் சிறப்புமிக்க கட்பருவ ரஜமகா விகாரையில் தேசிய வைபவத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததோடு, நாட்டில் 12 மாவட்டங்களை உள்ளடக்கிய 08 சமய ஸ்தலங்களில் ஒரே நேரத்தில் இந்த ஆசீர்வாத பூஜைகள் நடைபெற்றன.

அந்த வகையில் நுவரெலியா மாவட்டத்திற்கான ஆசீர்வாத நிகழ்வுகள் இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல் தலைமையில் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் காணி உரிமையாளர்களின் பங்களிப்புடன் ஆறாவது முறையாக சனிக்கிழமை சீதாஎளிய சீதையம்மன் ஆலயம், ஸ்வர்ணகிரி மகா விகாரை மற்றும் பரிசுத்த திருத்துவ தேவாலயம் ஆகியவற்றில் இடம்பெற்றது. இதன்போது தேயிலை தொழிலில் பங்களிக்கும் அனைத்து தரப்பினரையும் ஆசிர்வதித்து அவர்கள் வாழ்வதற்கான வலிமையையும், தைரியத்தையும், உறுதியையும் ஏற்படுத்த விசேட பூசைகள் நடைபெற்றன.

**ஆ.ரமேஸ்**

## வடக்கின் உதயம்

# மாங்காய் பிடுங்க மரத்தில் ஏறியவர் சடலமாக மீட்கப்பட்டார்

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

மாமரத்தில் மாங்காய் பிடுங்க சென்ற வயோதிபர் ஒருவர் மாமரத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் யாழில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சோனகத்தெரு, யாழ்ப்பாணத்தை சேர்ந்த முகமது சாக்கீர் (வயது 70) என்பவராவார்.

வெள்ளிக்கிழமை (05) காலை 9.30 மணியளவில் அயல் வீட்டில் மாங்காய் பிடுங்குவதற்காக சென்றுள்ளார். சிறுது நிமிடம் கழித்து அவரின் மனைவி அங்கு சென்ற போது மாமரத்தின் இரண்டு கிளைகளுக்கு இடையே அவர் விழுந்து காணப்பட்டார்.

அயலவர்களின் உதவியுடன் அவர் கீழே இறக்கப்பட்ட போது அவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதை தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு சடலம் எடுத்துச் செல்லப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.




கலாபூஷணம் பரீட் இக்பாலினால் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சனுக்கும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களுக்கும் தமிழ் மொழி பெயர்ப்புடன் குர்ஆன் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

# மன்னாரில் ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் கைது

**மன்னார் குறூப் நிருபர்.**

மன்னார் மதவாச்சி பிரதான வீதி குஞ்சுக்குளம் வீதியில் வைத்து 12 மில்லியன் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்கள் பயன்படுத்திய கார் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

மன்னார் தள்ளாடி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மன்னாரிலிருந்து சென்ற குறித்த காரை பின் தொடர்ந்து சென்ற புலனாய்வுப் பிரிவினர் குஞ்சுக்குளம் அருகில் உள்ள விகும்புர பகுதியில் வாகனத்தை சோதனை செய்தனர்.

இதன் போது வாகனத்தினுள் நூதனமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப் பொருளின் பெறுமதி 12 மில்லியன் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் கல்பிட்டியை சேர்ந்த (38) வயது மற்றும் மன்னார் அடம்பனைச் சேர்ந்த (27) வயதுடைய நபர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

# யாழில்.மரம் முறிந்து கடைக்கு பகுதியளவில் சேதம்

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால், பிறவுண் வீதியில், தொழில்நுட்பக் கல்லூரிக்குள் நின்ற பாரிய மரம் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சரிந்து விழுந்துள்ளது. மரம் வேரோடு சரிந்து வீதிக்குக் குறுக்காக விழுந்தமையால் வீதியின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டு இருந்ததுடன், மூன்று மின்கம்பங்களும் முறிந்துள்ளன. அத்துடன், முன்பாக இருந்த கடை ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. மரம் வெட்டப்பட்டு போக்குவரத்து சீராக்கப்பட்டதுடன் மின்சார சபையினர் முறிந்த மின் கம்பங்களை மாற்றி மின் இணைப்புக்களை சீர் செய்தனர்.

# யாழில். மின்சாரம் தாக்கி மாணவன் உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

மழைக்குள் நனைந்த ஆட்டுக்குட்டிகளை இடமாற்ற முற்பட்ட வேளை மாணவன் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளான்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் கண்ணதாசன் ராகுலன் (வயது 18) எனும் மாணவனே உயிரிழந்துள்ளான்.

மாணவனின் வீட்டில் வளர்க்கப்பட்ட ஆடு சனிக்கிழமை குட்டி ஈன்றுள்ளது. அந்நிலையில் இரவு முழுவதும் யாழில் கடும் மழை பெய்தமையால் ஆட்டு குட்டிகள் குளிரினால் கத்திய வண்ணமே இருந்துள்ளது. அதனால் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மாணவன் குட்டிகளை இடம்மாற்ற முனைந்த போது, ஆட்டு கொட்டிலுக்கு அருகில் பொருத்தப்பட்டு இருந்த மின் குமிழுக்கு சென்ற வயரில் மின் ஒழுக்கு ஏற்பட்டு மாணவன் மின்சார தாக்குதலுக்கு இலக்காகி உள்ளான்.

மாணவனை பெற்றோர் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போது, மாணவன் உயிரிழந்துள்ளான். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மட்டுவில் பகுதியில் வெசாக் தினத்தன்று கசிப்பு விற்றவர் கைது

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பகுதியில் வெசாக் தினத்தன்று பிற்பகல் 19 லீற்றர் கசிப்புடன் விசேட அதிரடிப்படையினரால் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. வாதரவத்தை பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைதான நபர் மற்றும் கசிப்பு ஆகியவற்றை சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# கிளிநொச்சி வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு தொழில்நுட்ப பொறிமுறை....

## கிளிநொச்சி நகர ரோட்டரிக் கழகத்தின் தகவல் தொழில்நுட்பத்திற்கான பொறுப்பாளர் ஆர். ரட்ணம் கஜேந்திரகுமார் (கண்ணன்)



**உங்களைப் பற்றி?**

நான் மட்டக்களப்பை பிறப்பிடமாக் கொண்டவன். மட்டக்களப்பு சிவானந்தாக் கல்லூரியில் கல்வி கற்று யாழ்ப்பாணம் பல்லைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பட்டப்படிப்பை நிறைவு செய்தேன். 1986 இல் சிறிது காலம் கொழும்பில் தனியார் கல்வி நிறுவனத்தில் கணிதப் பாடம் படிப்பித்தேன். அதன் பின்பு 1991 இல் சாம்பியா நாட்டின் கல்வி அமைச்சினால் ஆசிரியர்களை வேலைவாய்ப்புக்காக சேர்த்துக் கொண்டனர். அதில் நானும் தெரிவு செய்யப்பட்டு அந்நாட்டுக்குத் தொழிலுக்காகச் சென்றேன். 1991 இல் இருந்து 1995 ஆம் ஆண்டு வரையிலும் சாம்பியா நாட்டில் ஒரு பாடசாலையில் கற்பித்தேன். அதன் பின்பு அந்நாட்டில் தனியார் கம்பனியில் இரு வருடங்கள் வேலை செய்தேன். மொத்தம் ஏழு வருடங்கள் சாம்பியா நாட்டில் சேவையாற்றினேன்.

அங்கு இருந்த வண்ணம் அமெரிக்காவுக்கு லொத்தர் சீட்டு இழுப்பின் மூலம் விசா கிடைக்கப்பெற்று அமெரிக்கா சென்றேன். 1997 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் அமெரிக்காவில் தொழில் புரிந்தேன். ஆரம்பத்தில் வேறு தொழில்கள் செய்தேன். அதன் பின்பு அங்கு தகவல் தொழில் நுட்பப் பிரிவில்



## நோயாளர்கள் காத்திருக்காமல் தொலைபேசியின் ஊடாக சிகிச்சைக்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம்

இணைந்து கொண்டேன். அங்கு சென்று தொழில் நுட்ப அறிவையும் பிரத்தியேகமாகக் கற்றுக் கொண்டேன். ஒரு நிதி நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்ப பரிவில் கடமையாற்றினேன். அந்நிறுவனத்தில் கடமையாற்றக் கூடியவர்கள் விருப்பமானவர்கள் ஓய்வு பெற்றுச் செல்லலாம் என்று திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு இணங்க அவர்களிடம் என்னுடைய சேமிப்புக் கொடுப்பனவை பெற்றுக் கொண்டு தற்போது தாய் நாட்டுக்கு வந்து விட்டேன்.

எந்த நாட்டில் இருந்தாலும் எமது தாய் நாடு போல் வராது. ஒரே ஒரு காட்சி மட்டும் தான் இல்லை. பனிபொழிவைத் தவிர மற்றைய எல்லாம் இருக்கிறது. மக்கள் தங்களுடைய மனங்களை மாற்றினார்கள் என்றால் இந்த நாட்டைப் போல உலகத்தில் வேறு எந்த நாடும் இருக்காது எனக் கருதுகின்றேன்.

**இலங்கையின் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி பற்றிக் கூறுவீர்களா?**

தகவல் தொழில் நுட்பம் இப்பொழுது எவ்வளவோ வளர்ந்து விட்டது. ஒரு முப்பது வருடத்திற்கு முன்னர் என்ரோய்ட் கைபேசி வரும் என்று எதிர்பார்த்திருப்பீர்களா? அதன் வேகம் எப்படி இருந்தது. அதன் வேகம் போய்க் கொண்டுதான் இருக்கிறது. அதனோடு போட்டி போட்டுக் கொண்டு செல்வதற்கு நாங்கள் இல்லை. பெரிய இடைவெளி ஒன்று நிலவுகிறது.

பல்கலைக்கழகம் முடித்து வரும் ஒருவர் தொழில் நுட்பத் துறை பற்றி அறிந்து இருக்க வேண்டும். அவர் எந்த துறையில் கல்வி பயின்றவராக இருந்தாலும் தொழில் நுட்ப அறிவு தெரிந்திருக்க வேண்டும். தொழில் நுட்ப அறிவு இல்லாமல் இந்தக் காலத்தில் வாழ முடியாது. எந்தவொரு அலுவலகத்தை எடுத்துக் கொண்டாலும் இப்பொழுதும் பழைய முறைகளையே பயன்படுத்தி வருகின்றனர். மடிக் கணனிகள் வைத்திருப்பார்கள். ஆனால் அவர்கள் அதனை எதற்குப் பயன்படுத்துகின்றார்கள் என்பது தெரியாது. தொடர்பாடல்கள் ஓரளவுக்கு வந்து விட்டது. ஆனால் அது வளர்ந்து வந்த வேகம் போதாது என்றுதான் சொல்ல வேண்டும்.

எமது நாட்டில் தொழில் நுட்பங்களோடு மக்கள் செல்லும் பயணத்தையும் அவர்கள் பயன்படுத்தும் தொழில் முறைகளையும் ஒப்பீட்டு ரீதியாகப் பார்க்கின்ற போது ஒரு பாரிய இடைவெளி காணப்படுகிறது. மேற்கத்திய நாட்டு மக்கள் தொழில் நுட்ப அறிவின் வேகத்திற்கு ஏற்ப அந்நாட்டு மக்களும் வேகமாகப் பயணம் செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

**கிளிநொச்சி ரோட்டரிக் கழகத்தின் மூலம் ஸ்மாட் விளேச் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அறிகின்றோம்.அது தொடர்பில் சில கருத்துக்கள்,..**

எங்களுடைய கிளிநொச்சி நகர ரோட்டரிக் கழகத்தின் மூலம் ஸ்மாட் விளேச் என்று ஆரம்பித்திருக்கின்றோம். இதன் நோக்கம் என்னவென்றால் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வாழ்க்கையை இலகுபடுத்தும் வகையிலான செயற்திட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம். அதில் நாங்கள் முதலாவதாகச் செய்யப் போவது என்னவென்றால் வைத்தியசாலையில் எந்தவொரு நோயாளியும் வந்து கண நேரத்திற்கு காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் நோயாளிகள் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நோயாளிகள் ஒரே நேரத்தில் வெளிநோயாளர் பிரிவுக்குச் செல்லாமல் குறித்த நேரத்திற்குச் சென்று நோய்க்கான சிகிச்சையை செய்து கொண்டு குறித்த நேரத்தில் திரும்புவதற்கான தொழில்நுட்ப வாயிலாக பரீட்சார்த்தமான ஒரு புதிய முறையை அறிகமுகப்படுத்தவுள்ளோம். அதற்கு முன்னர் தொழில் நுட்பவிடயங்களில் அனுபவமுள்ள இரு நபர்களை கிளிநொச்சி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதியில் நின்று அங்கு சமுகமளிக்கின்ற நோயாளர்களின் தகவல்களைத் திரட்டவுள்ளனர். என்ன நோய்? எங்கு இருந்து வருகிறீர்கள்? எதில் வந்தீர்கள்? தாதிமார்கள், வைத்தியர்கள் ஆகியவர்களைச் சந்திப்பதில் எவ்வளவு நேரத்தைச் செலவு செய்கிறார்கள் போன்ற விடயங்களை தேவையைக் கருத்திற் கொண்டுகள ஆய்வினை மேற்கொள்ளவுள்ளனர். இதுதான் முக்கியம். அதிலும் குறிப்பாக எத்தனை வைத்தியர்கள் இருக்கிறார்கள். ஒரு நோயாளியை வைத்தியர் எவ்வளவு நேரம் பார்க்கிறார். எவ்வளவு தூரத்தில் இருந்து வருகிறார் என்பது பற்றி ஆராய்தல் வேண்டும். உ+ம்;ஒருவர் ஆசிரியராயின் குறுந்தகவலினை அனுப்பும் போது அதில் தொழில் விபரம் கேட்கப்பட்டு இருக்கும் . அவருக்கு பாடசாலைப் பிள்ளைகளுடைய படிப்பு கல்வி நேரம் பாதிக்காதவாறு நேரம் வழங்கப்படும். அவர் பாடசாலை விட்ட பின்பு வைத்தியசாலைக்கு வரலாம்.என்ன தேவை என்பதையும் எவ்வளவு ஒரு நபருக்கு எவ்வளவு நேரம் செலவாகுகின்றன என்பதை அறிந்து ஒரு செயற்திட்டத்தை கிளிநொச்சி வைத்தியசாலையில் வடிவமைக்கவுள்ளோம்.

பொதுவான தொலைபேசிக்கு தனக்கு என்ன நோய்,பெயர், பிறந்த திகதி,எங்கிருந்து வருகின்றோம் என்று அறிவித்தால். வைத்தியசாலையில் இருந்து ஒரு பதில் வரும். தங்களுக்கு வழங்கப்பட்ட நேரம் காலை 10.35 நிமிடம் என்று வரும். சரியாக 10.30 மணிக்கு அங்கு சென்றால் ஒரு ஐந்து நிமிடம் காத்து நின்று நீங்கள் வைத்தியரைச் சந்தித்து மருந்தினைப் பெற்று வரலாம்.

இதன் செயற்திட்டத்தை கிளிநொச்சி நகர ரோட்டரிக் கழகம் முன்னெடுக்கவுள்ளது. வைத்தியசாலையில் கடமைபுரிபவர்களுக்கும் பயிற்சிகள் வழங்கவுள்ளோம். இதற்கு முன் வைத்தியசாலையின் முகாமைத்துவக் குழுவினர்களுடன் ஒப்பந்தமொன்றை வெகு விரைவில் கைச்சாத்திடவுள்ளோம். வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சுகந்தன் இதற்கு மிகுந்த ஆதரவினை வழங்கி வருகிறார்.

இவை குறித்து ரோட்டரிக் கழகத் தலைவர் வண பிதா யோசுவா அடிகளார் தலைமையில் ஹபரணை, பொலன்னறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களின் பிராந்திய சுகாதார வைத்தியப் பணிப்பாளர்களுடன் சந்திப்பினை நடத்தினோம். அவர்கள் இந்த நல்ல விடயத்தை வரவேற்றதுடன் அதனை அமுல்படுத்திவிட்டு தங்களுக்கும் அறிவிக்கும்படியும் தாங்களும் இச்செயற்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் ஏனைய வைத்தியசாலைகளிலும் இதனைப் பரந்துபட்ட முறையில் செய்யலாம். ஒரு நோயாளி நான்கு ஐந்து மணித்தியாலம் செலவு செய்யும் நேரத்தை சேமிக்க கூடியதாக இருக்கும். வெளி நோயாளர் பிரிவில் சன நெரிசல்களை குறைக்க முடியும்.

**ரோட்டரிக் கழகத் தலைவர் வண பிதா யோசுவா அடிகளார் அவர்களின் செயற்பாடுகள் குறித்துக் கூறுவீர்களா?**

அவர் தலைமைத்துவப் பண்புகளைப் பேணி கண்ணியமாகவும் கட்டுப்பாடுடனும் நடப்பவர். அவர் எந்தவொரு விடயத்தையும் நேரத்திற்கு தொடங்குவது எனக்குப் பிடித்துக் கொண்ட விடயம் ஆகும். இன்றைக்கு மாலை நான்கு மணிக்கு கூட்டம் ஒன்று அழைப்பு விடுத்தால்,சரியாக 4.00 மணிக்கு கூட்டத்தை ஆரம்பித்து விடுவார். மற்றவர்களுடைய நேரத்தை மதிப்பதில் நல்லதொரு மனிதர். ஒவ்வொரு வேலைத் திட்டத்தையும் திறன்படச் செய்வார். தலைவர் என்பவர் எல்லாவற்றையும் தனக்குள் வைத்திருக்கக் கூடாது. ஒவ்வொரு பொறுப்பு வாய்ந்தவர்களிடம் ஒப்படைத்து அவர்கள் மூலம் பயன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதுதான் தலைவர் ஒருவருக்குரிய முக்கியமான பண்பு. அந்தப் பொறுப்புக்களை பகிர்ந்து கொடுத்து விட்டு அவற்றைக் கண்காணிப்புகளில் ஈடுபடுதல் என்பதுதான் முக்கியமானதாகும். எனக்கு தகவல் தொழில் நுட்பம் தெரிந்தவர் என்ற வகையில் அதன் வேலைப் பணிகளை என்னிடம் ஒப்படைத்துள்ளார்.






## உயர் தொழில்நுட்ப உற்பத்தித் துறையில் சீனாவில் ஆளணி பற்றாக்குறை



2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுச் செயற்பாடானது மேற்கொள்ளப்படும்.
3. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: +94-0112236588) மற்றும் பின்வரும் முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.30 மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையே விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. இந்தப் பெறுகையில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ள இலங்கைச் சந்தைக்கு கனிய முன்கலவைகளை வழங்கும் உற்பத்தியாளர்கள் அல்லது ஏக நியமன முகவர்கள் / உற்பத்தியாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு மட்டுமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். வெளிநாட்டு முதன்மையாளர்களினால் நியமன முகவர்கள் / அங்கீகரிக்கப்பட்ட இலங்கை முகவர்களாக நியமிக்கப்படாதவர்களின் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA3 சகிதம் மீளளிக்கப்படாத கட்டணமாக 17,000.00 ரூபா ரொக்கப் பணத்தை ஜா-எல, கப்புவத்த, த.பெ. இல. 17, நீர்கொழும்பு வீதி, இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் செய்வதன் பேரில் 2023.05.22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 2023.05.23ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2023.05.23ஆம் திகதி முதல் 2023.08.22ஆம் திகதி வரையான 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 1,200,000.00 ரூபா தொகைக்கான 2023.05.23ஆம் திகதி முதல் 2023.09.19ஆம் திகதி வரையான 119 நாட்கள் செல்லுபடியாகும் மத்திய வங்கியால் அனுமதிக்கப்படும் இலங்கையில் தொழிற்படும் ஒரு வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் (2023.05.23ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு) விலைமனுதாரர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் பின்வரும் முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிடட்,**
**த. பெ. 17, நீர்கொழும்பு வீதி, கப்புவத்த,**
**ஜா-எல.**

---

# afc தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 28.02.2023 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 23.05.2023 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகளை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரகோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

722, கோட்டை வீதி இராஜகிரிய
23.05.2023

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600

---

# சிறு விளம்பரம்









**கார்கள்**
விற்பனைக்கு

SP KW-9251 Tata Nano car, 2012, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பீஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03, தொ.பே.: 0711 210810. 027014




**ஜீப்புகள், பிக்கப்புகள்**
விற்பனைக்கு

WP CBO-9898 Toyota Raize Jeep 2020, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பீஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03, தொ.பே. 0714 54 295 8. 027002




**பஸ்கள், லொறிகள்**
விற்பனைக்கு

SP HF-7950 Daihatsu mini truck, 1998, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பீஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03, தொ.பே. 0711 21 081 0. 027010




**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP YW-7 355 Bajaj, 2011, WP QJ-6824 Bajaj, 2006, SG YD-046 1 Bajaj, 2010, threewh e el கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பீஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03, தொ.பே. 0711 21 081 0. 026997

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

# இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
## சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சு
## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு
## 2023ஆம் ஆண்டிற்காக மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்தல்

**WL/2/17/05/2023**

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவரால் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள மற்றும் அதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி | கேள்விப் பிணை (ரூ) | மீளளிக்கப்படாத கேள்வி கட்டணம் |
|---|---|---|
| Lot 1 - Surgical Instruments | 67,750.00 | 2,500.00 |
| Lot 2 - Necropsy Instruments | 67,750.00 | 2,500.00 |
| Lot 3 - Heat Lamp | 900.00 | 1,000.00 |

1. ஒரு கேள்விதாரர் ஒரு உருப்படிக்கு அல்லது பலவற்றிற்கு கேள்விகளை வைக்கலாம்.
2. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் நடைபெறும்.
3. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2023.05.26 வரை அரச வேலை, அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை பத்தரமுல்ல, வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.
4. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளது மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை 2023.05.26ம் திகதி வரை வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பெயரில் மேற்கொள்ளப்படும். எழுத்து மூல வேண்டுதலுடன் மேலே குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு பெற்றுக் கொள்ளலாம்.
5. கேள்வி ஆவணங்களுடன் Lot 1 - ரூ. 67,750.00 Lot 2 - ரூ. 67,750.00 Lot 3 - 9.00 கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்படும் மாதிரியின் பிரகாரம் அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கி மூலம் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் காசாளரிடம் 2023.05.29 பி.ப. 2.00 இற்கு முன்பு காசு செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணையை சமர்ப்பிக்காத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
6. கேள்விப் பிணையானது கேள்வி திறக்கப்படும் தினம் முதல் குறைந்த பட்சம் 90 நாள் காலத்திற்கு செல்லுபடியாதல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக கடித உறைகளில் இட்டு, பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2023.05.29 பி.ப. 2.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடமுடியும் அத்துடன், தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் அன்றே பி.ப. 2.00 இற்கு இடம்பெறுவதுடன், அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
8. கேள்விப் பத்திரம் பற்றிய மேலதிக விபரங்களை 011-2871537 தொ.பே. மூலம் திணைக்கள உதவிப் பணிப்பாளர் (நிதி) ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இப்பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் காரணங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.
9. கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் பற்றி ஏற்படுகின்ற எந்த செலவுகள் பற்றியும் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழுவினால் பொறுப்புக் கூறப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திரபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

---

# மத்திய சுற்றாடல் அதிகார சபை
## இறுதி தீர்மான பொது அறிவித்தல்

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ(4) இன் கீழான அறிவித்தல்**

**உத்தேசிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பால் பண்ணை அபிவிருத்தி செயற்றிட்டம் வீஹெரதன்ன பிரிவு எல், பதவியா**

### ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப.) அறிக்கை

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை பிற்சேர்க்கை (ஆ.சு.ப.) அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 22 நவம்பர் 2000ம் திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 9(i) இற்கமைவாக மேற்கூறப்பட்ட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை இல. 500 டீ.பி. ஜயா மாவத்தை, கொழும்பு-10 இல் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன். 2000ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமாக மேற்கூறப்பட்ட ஆ.சு.ப. அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**'பரிசரபியச',**
**இல. 104, டெனசில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

---

# மீட்கப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை – வன்னி பிராந்தியம்

31.12.2021ம் திகதி வரை வன்னிப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 22.05.2023 திகதி வரை மீட்கப்படாத நகைகள் கீழே கொடுக்கப்பட்ட திகதி மற்றும் இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஒவ்வொரு நாளும் முற்பகல் 9.00 மணி முதல் ஏல விற்பனை நடைபெறும்.

| | |
|---|---|
| ஏலவிற்பனை திகதி | 23.05.2023 மற்றும் 24.05.2023 |
| ஏலவிற்பனை இடம் | பிராந்திய காரியாலயம், வன்னி, வவுனியா |
| அடகு வைக்கப்பட்ட கிளை | முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முருங்கன், செட்டிக்குளம் |
| அடகு வைக்கப்பட்ட சேவை நிலையம் | புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வவுனியா நகரம், நெடுங்கேணி, பேசாலை, கிளிநொச்சி நகரம், பளை, மல்லாவி, கனகராயன்குளம், நானாட்டான், சிலாவத்துறை |

மேற்படி ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி ரத்துச்செய்யவோ, ஒன்று சேர்க்கவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு சகல அதிகாரமும் உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி பிராந்திய தலைமைச்செயலகம் வன்னி**
**தொலைபேசி இல : 024 2225054 / 024-2222972**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

---

# அறிவித்தல்

## நாத்தாண்டி பிரதேச சபை

### 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் முன்மொழிவுகளை பெறுதல்

1987 இன் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய, வட மேல் மாகாண கௌரவ ஆளுநரினால் 2020.10.29 ஆம் திகதிய மற்றும் 2199/15 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் (அதிவிசேட) வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்ட பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் ஒழுங்குமுறை இலக்கம் 6க்கு அமைய நாத்தாண்டி பிரதேச சபையினால் 2024 ஆம் ஆண்டுடன் தொடர்புபட்டு தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஆவணம் மற்றும் அபிவிருத்தித் திட்டத்திற்கு உள்ளடக்கப்படுவதற்கு முன்மொழிவுகள் ஏற்கப்படும். நீங்கள் அந்த முன்மொழிவுகளுக்கு உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கின்ற முன்மொழிவுகளை 2023 ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் என்னிடம் பெற்றுத்தரும்படி தயவோடு அறியத்தருகிறேன்.

| | |
|---|---|
| அலுவலக முகவரி | - பிரதேச சபை, நாத்தாண்டி |
| அலுவலக தொலைபேசி இலக்கம் | - 032-2254276 |
| அலுவலக தொலைநகல் இலக்கம் | - 032-2254275 |
| மின்னஞ்சல் முகவரி | - naththandiyaps@yahoo.com |

**கே.பீ. சந்தன குமார**
**செயலாளர்**
**பிரதேச சபை**
**நாத்தாண்டி**

**2023.05.02 ஆம் திகதி பிரதேச சபை அலுவலகத்தில்**

---

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சு

# கேள்வி அழைப்பு (IFB)

| உருப்படி இல | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | தெற்கு அதிவேக வீதியில் வெலிபென்ன முதல் பத்தேகம வரையான பகுதியில் பராமரிப்பு விடயங்களுக்கான தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் |

மேற்படி செயற்றிட்டத்திற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் செயற்பாட்டின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2023 மே 08 முதல் 2023 மே 29 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் இணைய தளம் www.rda.gov.lk இற்கு பிரவேசிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

---

# பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
## மாவட்ட செயலகம் - மொனராகலை
## பெறுகை அறிவித்தல் – காலத்தை நீடித்தல்

மொனராகலை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பிரதேச செயலக பிரிவில் கொட்டியாகல, கெபிலித்த பிரதேசத்தில் காணி அளவை விடயங்களை நிறைவேற்றுவதற்காக 8 பேர் கொண்ட குழுவை போக்குவரத்து செய்யக்கூடிய கடினமான பாதைகளில் பயணம் செய்யக்கூடிய (Off Road) 20 வாகனங்களை 03 மாத காலத்திற்கு சாரதி மற்றும் எரிபொருளுடன் வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் பற்றிய 2023.04.06ம் திகதிய பத்திரிகை அறிவித்தலில் பிரசுரமான கேள்வி விநியோகிக்கும் தினம் மற்றும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் தினம் கீழ்க்காணுமாறு திருத்தப்படுகிறது. அவ்வாறே ஒரு நிறுவனம் அல்லது உரிமையாளரால் வழங்க வேண்டிய குறைந்தபட்ச வாகனங்களின் எண்ணிக்கை 04 இல் இருந்து 01 வரை குறைக்கப்படுகிறது.

- ❖ கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி 2023.05.19 மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையாகும்.
- ❖ பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் கேள்விகள் திறக்கப்படும் திகதி 2023.05.22 பி.ப. 2.30 ஆகும்.

அவ்வாறே 2023.04.06ம் திகதி பத்திரிகை அறிவித்தலில் பிரசுரமான ஏனைய விடயங்கள் மாற்றமின்றி காணப்படும்.

**ஆர்.எம்.பீ.எஸ்.பீ. ரத்னாயக்க**
**மாவட்ட செயலாளர்**
**தலைவர்,**
**பெறுகைக் குழு.**
**மாவட்ட செயலகம்**
**மொனராகல.**

---

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

**For classified advertisements and for replies**
received in response to advertisements published under Lake House box numbers
Manager front office
**+94 112429341**
**Hotline 1949**

# உடுபத்தாவ பிரதேச சபை

## 2024 வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

உடுபத்தாவ பிரதேச சபையின் 2024ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உற்படுத்துவதற்காக உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் மக்களிடம் அபிவிருத்தி ஆலோசனைகள் கோரப்படுகின்றன.

உங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆலோசனைகளை எழுத்து மூலம் 2023 ஜூன் 30ம் திகதிக்கு முன்பு "செயலாளர், உடுபத்தாவ பிரதேச சபை, உடுபத்தாவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில், மின்னஞ்சல் மூலம், அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**செயலாளர்**
**உடுபத்தாவ பிரதேச சபை,**
**தொலைபேசி இலக்கம் - 037-2286577/ 037-4947095**
**மின்னஞ்சல் முகவரி - udubps@gmail.com**

# பெறுகை அறிவித்தல்

## தேசிய கண் வைத்தியசாலை - கொழும்பு 10

1. 2023 வருடத்தில் தேசிய கண் வங்கிக்கு Human Cornea Storage Media - 1000 கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2023-05-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் சகல விலைமனுக்களும் Human Cornea Storage Media பெறுகை எனக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு-10, தேசிய கண் வைத்தியசாலை கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. NMRA பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்
4. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய கண் வைத்தியசாலை, கொழும்பு-10.**
**தொலைபேசி: 0112693911, 0112678940**

## 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டதன் பிரகாரம் காணி சுவீகரித்தல் சட்டம் 7வது பிரிவின் கீழ் அறிவித்தல்

**தொடர்பு இலக்கம் :- பிய3/1/1/503**

இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கு எண்ணியுள்ளது. இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2330/06 மற்றும் 2023.05.04ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : கம்பஹா |
| பிரதேச செயலகப் பிரிவு | : பியகம |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இலக்கம் 275/A, ஹெய்யன்துடுவ தெற்கு |
| கிராமத்தின் பெயர் | : ஹெய்யன்துடுவ |
| காணியின் பெயர் | : கனத்த அல்லது கனத்த வத்த மற்றும் தெனிய கனத்த |
| ஆரம்ப திட்டப்பட இலக்கம் | : 4263 |
| துண்டு இலக்கம் | : 1 முதல் 4 வரை |

**எஸ்.ஏ. ஷந்திமா சூரியஆரச்சி**
**பிரதேச செயலாளர் - பியகம**

**2023 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி**
**பியகம பிரதேச செயலகத்தில்,**
**சபுகஸ்கந்த,**
**மாகொல.**

# பெறுகை அறிவித்தல்

### நீர்ப்பாசன அமைச்சு

## நீர்ப்பாசனத் திணைக்களம் - அம்பாறை

அம்பாறை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் நிர்மாண வேலைகளுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வேலை விபரம் | தேவையான ICTAD பதிவு (நீர்ப் பாசனம் மற்றும் நீர் வழங்கல்) | விலைமனு வைப்பு | | | விலைமனுப் படிவங்கள் வழங்கும்/ ஏற்றுக் கொள்ளும் அலுவலகம் |
|---|---|---|---|---|---|---|
| | | | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்பு (பணமாக அல்லது பாதுகாப்பு வைப்பாக): பணமாகச் செலுத்துவதானால் (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்பு (பணமாக அல்லது பாதுகாப்பு வைப்பாக): பாதுகாப்பு வைப்புத் தொகை (ரூபா) | |
| 1 | அம்பாறை பிரிவில், கோணகொல்ல அலகிலுள்ள G. 10.2 கால்வாயில் 0+604 முதல் 0+771 வரையில் கொங்றீட் லைனிங் செல்லும் கால்வாய் பாயும் கட்டமைப்பை நிர்மாணித்தல் | C 6 , C 7 மற்றும் C 8 | 3000.00 | 50,000.00 | 100,000.00 (செல்லுபடிக் காலம் 13.09.2023) | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| 2 | பொத்துவில் பிரிவில், பொத்துவில் அலுவலக இடப்பரப்பில் பொறியியல் உதவியாளர் (ஆண்கள்) களியாட்ட இல்லத்தின் முதலாம் மாடியை நிர்மாணித்தல் | C 5 , C 6 மற்றும் C 7 | 3000.00 | 65,000.00 | 130,000.00 (செல்லுபடிக் காலம் 13.09.2023) | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| 3 | பொத்துவில் பிரிவில், பொத்துவில் அலுவலக இடப்பரப்பில் பொறியியல் உதவியாளர் (பெண்கள்) களியாட்ட இல்லத்தின் முதலாம் மாடியை நிர்மாணித்தல் | C 5 , C 6 மற்றும் C 7 | 3000.00 | 65,000.00 | 130,000.00 (செல்லுபடிக் காலம் 13.09.2023) | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| 4 | கல்முனை பிரிவில், செங்கப்படை அலகில், ஒட்டியான்மடு அணையில், சின்னவெளி வடிகாலமைப்பின் இறுதியில் வடிகால் வெளியேற்றத்தை நிர்மாணித்தல் | C 7 , C 8 மற்றும் C 9 | 3000.00 | 20,000.00 | 40,000.00 (செல்லுபடிக் காலம் 31.08.2023) | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| 5 | கல்முனை பிரிவில், செங்கப்படை இடதுகரை அலகில் கொடுவாபினி கால்வாயில் இரண்டு நீர் கட்டுப்பாட்டு கட்டமைப்பை நிர்மாணித்தல் | C 7 , C 8 மற்றும் C 9 | 3000.00 | 20,000.00 | 40,000.00 (செல்லுபடிக் காலம் 31.08.2023) | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| 6 | அக்கரைப்பற்று பிரிவில் இலுக்சேனை PBKL கால்வாயில் 2+260 மற்றும் 5+225 இடங்களில் கால்வாய் பாயும் கட்டமைப்பை நிர்மாணித்தல் | C 7 , C 8 மற்றும் C 9 | 3000.00 | 25,000.00 | 50,000.00 (செல்லுபடிக் காலம் 31.08.2023) | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| 7 | அம்பாறை பிரிவில், யாய 4 வடிகால் கால்வாயில் பெட்டி மதகு சகிதம் கொங்றீட் லைனிங் நிர்மாணித்தல் | C 5 , C 6 மற்றும் C 7 | 3000.00 | 65,000.00 | 130,000.00 (செல்லுபடிக் காலம் 13.09.2023) | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |
| 8 | அம்பாறை பிரிவில் பன்னல்கம அலகின் பிரதான கால்வாயில் PG 31 D கால்வாயில் FTOS நிர்மாணித்தல் மற்றும் திசை திருப்பும் கட்டமைப்பு மடையை புனரமைத்தல் (உடைந்துள்ள PG 07, PG 08, PG 09 உடைந்த கட்டமைப்பின் மேற் பகுதி) | C 6 / C 7 | 3000.00 | 50,000.00 | 100,000.00 (செல்லுபடிக் காலம் 13.09.2023) | நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை |

2. தேசிய போட்டி கேள்வி கோரல் செயற்பாடுகளுக்கமைய கேள்வி கோரப்படும்.

3. கேள்விகளை வழங்குவதற்குத் தேவையான தகைமைகள்:
   (a) ICTAD யில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
   (b) விசேடமாக நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு மற்றும் வீடமைப்புத் துறையில் 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
   (c) கடந்த 03 வருடங்களில் 5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுள்ள நிர்மாணங்களை மேற்கொண்டதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   (d) தேவையான அளவு தொழில்சார் தேர்ச்சி மற்றும் ஊழியர் குழுவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   (e) கடந்த 03 வருடங்களுக்கான கணக்கு விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இது தொடர்பில் ஆர்வம் கொள்ளும் கேள்விதாரர்கள் நிர்மாணங்களுக்கான விபரங்களை உரிய நீர்ப்பாசன அலுவலகங்களின் ஒப்பந்தக் கிளையில் 2023-05-08ஆம் திகதி முதல் 2023-05-29ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அலுவலக வேலை நாட்களில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான கேள்விப் படிவத் தொகுதியொன்றை 2023-05-08ஆம் திகதி முதல் 2023-05-29ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை எந்தவொரு வேலை நாளிலும் நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திற்கு மீளளிக்கப்படாத வைப்பைச் செலுத்தி அலுவலக வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

6. பூரணப்படுத்திய கேள்விப் படிவங்களை மேற்கூறப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-05-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிந்ததும் உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் அச்சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ள முடியும். பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

7. இதன்பொருட்டு மேலே காட்டப்பட்டுள்ள வகையில் அந்தந்த வேலை விடயங்களுக்குரிய கேள்வி பாதுகாப்பு முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவை மேற்குறிப்பிடப்பட்ட திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வங்கியல் பெற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு முறியாக இருத்தல் வேண்டும்.

மேற்படி விடயங்கள் தொடர்பில் நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை 063-2222171 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**வலயப் பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை.**
2023-05-08.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, மத்திய மாகாணம்

| | |
|---|---|
| பெறுகை நிறுவனம் | : சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், கண்டி |
| செயற்றிட்டத்தின் பெயர் | : ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை வலுவூட்டல் செயற்றிட்டம் (PSSP), உலக வங்கி |
| செயற்றிட்ட ID | : **P 163721** |
| பெறுகைத் தலைப்பு | : மருத்துவம் சாராத உபகரணங்களின் பெறுகை (மின்சாரம் / தளபாடம்) |
| ஒப்பந்த இல. | : **CPC/RDHS/KY/F13-1/NCB/1/2023** |
| பிரசுரிக்கும் திகதி | : 2023.05.08 |

01. நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் அதிக ஆபத்தான சனத்தொகையுள்ள பகுதிகளில் தொற்றா நோய்களை அடையாளம் காணல் மற்றும் முகாமைத்துவ வலியுறுத்தலுடன் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்படுத்தல் மற்றும் தரத்தை அதிகரிக்கும் இலக்குடன் இலங்கையில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை வலுவூட்டல் செயற்றிட்டமானது அமுல்நடாத்தப்படுகின்றது.
02. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மருத்துவம் சாராத உபகரணங்களின் (மின்சாரம் / தளபாடம்) பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கண்டி, பிராந்திய சுகாதார சேவைகளின் பணிப்பாளரின் அலுவலக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
03. விலைமனுதாரர்களின் தகைமை மற்றும் தகுதித்தன்மை தேவைப்பாடுகள் ஆகியன விலைமனுக்கோரல் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
04. ஒவ்வொரு வகுதிக்கும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரியில் குறிப்பிட்டுள்ளவருக்கு 2023.05.08ஆம் திகதி முதல் 2023.05.29ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
05. ஆர்வம், தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவல்களை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலக கணக்காளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 10.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 081-2236452, மின்னஞ்சல் முகவரி: rdhskandysupply123@gmail.com மற்றும் கண்டி, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் நிதிப் பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. அனைத்து விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் புகழ்வாய்ந்த வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் கண்டி, சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம், சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டதுமான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது கண்டி, சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தின் சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு)
07. கண்டி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் 2023.05.15ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இடம்பெறும்.
08. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023.05.30ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில் ''தலைவர், பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெட்டி 56, எஹெலப்பொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கண்டி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வகுதிப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''மருத்துவம் சாராத உபகரணங்களுக்காக (மின்சாரம் / தளபாடம்) விலைக்கோரல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
09. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் முகவரியில் நடைபெறவுள்ள விலைமனுக்களின் திறத்தலுக்கு நேரடியாக சமுகமளிக்கும் அல்லது நிகழ் நிலையில் (online) விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
10. சமர்ப்பிக்கப்படும் அனைத்து விலைமனுக்களும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படுமென்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

| தொ. இல. | அம்சத்தின் பெயர் | அலகுகளின் எண்ணிக்கை | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் (ரூபா) | விலைமனுப்பிணை முறி (ரூபாவில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | விலைமனுப் பிணை முறி | ரொக்கப் பண வைப்பு |
| **மருத்துவம் சாராத உபகரணங்கள் (மின்சாரம்)** | | | | | |
| வகுதி இல. 01: மின்சார உபகரணங்கள் (1) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-1/2023 | | | | | |
| 1.1 | வளிச்சீராக்கி இயந்திரம் | 24 | 3,000.00 | 235,500.00 | 117,750.00 |
| 1.2 | நிறுத்திவைக்கும் மின் விசிறிகள் | 22 | | | |
| 1.3 | புகைப்படப் பிரதி இயந்திரம் | 13 | | | |
| வகுதி இல. 02: மின்சார உபகரணங்கள் (2) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-2/2023 | | | | | |
| 2.1 | மல்டி மீடியா புரஜெக்டர்கள் | 4 | 5,000.00 | 216,400.00 | 108,200.00 |
| 2.2 | புகைப்படப் பிரதி இயந்திரங்கள் | 19 | | | |
| 2.3 | லேசர் அச்சுப்பொறிகள் | 13 | | | |
| 2.4 | ஸ்டிக்கர் அச்சுப்பொறிகள் | 3 | | | |
| 2.5 | பார்கோட் அச்சுப்பொறிகள் | 20 | | | |
| 2.6 | லெமினேட்டர் | 1 | | | |
| 2.7 | Server | 1 | | | |
| 2.8 | Server Rack | 1 | | | |
| வகுதி இல. 04: மின்சார உபகரணங்கள் (2) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-3/2023 | | | | | |
| 3.1 | புல் வெட்டும் இயந்திரம் | 10 | 3,000.00 | 34,000.00 | 17,000.00 |
| 3.2 | நீர் பம்பி 5.0 Hp | 1 | | | |
| 3.3 | நீர் பம்பி 1.5 Hp | 4 | | | |
| வகுதி இல. 05: IT உபகரணம் (1) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-4/2023 | | | | | |
| 4.1 | மேசைக் கணனிகள் | 45 | 5,000.00 | 405,000.00 | 202,000.00 |
| வகுதி இல. 06: IT உபகரணம் (2) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-5/2023 | | | | | |
| 5.1 | மடிக் கணனிகள் | 21 | 5,000.00 | 231,000.00 | 115,500.00 |
| வகுதி இல. 08: IT உபகரணம் (3) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-6/2023 | | | | | |
| 6.1 | Tabs | 10 | 3,000.00 | 45,400.00 | 22,700.00 |
| 6.2 | UPS | 62 | | | |
| 6.3 | 3Kva Online UPS | 1 | | | |
| வகுதி இல. 09: மின் பிறப்பாக்கி (1) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-7/2023 | | | | | |
| 7.1 | மின் பிறப்பாக்கி இயந்திரம் 7kva | 03 | 5,000.00 | 54,000.00 | 27,000.00 |
| வகுதி இல. 10: மின் பிறப்பாக்கி (2) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-8/2023 | | | | | |
| 8.1 | மின் பிறப்பாக்கி இயந்திரம் 10 kva | 04 | 5,000.00 | 160,000.00 | 80,000.00 |
| வகுதி இல. 11: மின் பிறப்பாக்கி (3) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-9/2023 | | | | | |
| 9.1 | மின் பிறப்பாக்கி இயந்திரம் 20 kva | 02 | 5,000.00 | 120,000.00 | 60,000.00 |
| வகுதி இல. 12: மின் பிறப்பாக்கி (4) | | | | | |
| ஒப்பந்த இல.: CPR/RDHS/KY/F13-1/NCB/1-10/2023 | | | | | |
| 10.1 | மின் பிறப்பாக்கி இயந்திரம் 25 kva | 02 | 5,000.00 | 140,000.00 | 70,000.00 |

| தொ. இல. | அம்சத்தின் பெயர் | அலகுகளின் எண்ணிக்கை | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் (ரூபா) | விலைமனுப்பிணை முறி (ரூபாவில்) | |
|---|---|---|---|---|---|
| | | | | விலைமனுப் பிணை முறி | ரொக்கப் பண வைப்பு |
| **மருத்துவம் சாராத உபகரணங்கள் (தளபாடம்)** | | | | | |
| வகுதி இல. 01: வைத்தியசாலை பணியாளர் தளபாடங்கள் | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-11/2023 | | | | | |
| 11.1 | மெத்தையுடனான பணியாள் படுக்கைகள் | 114 | 5,000.00 | 225,500.00 | 112,750.00 |
| 11.2 | மடிக்கக்கூடிய பயண மெத்தைகள் | 12 | | | |
| 11.3 | மடிக்கக்கூடிய கேம்ப் படுக்கைகள் | 12 | | | |
| 11.4 | உருக்கு பைலிங் கெனெட்டுகள் | 85 | | | |
| 11.5 | துவாய் ராக்கைகள் | 7 | | | |
| வகுதி இல. 02: அலுவலக தளபாடம் (1) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-12/2023 | | | | | |
| 12.1 | அலுவலக கப்போர்ட் - பெரியவை | 23 | 3,000.00 | 301,900.00 | 150,950.00 |
| 12.2 | அலுவலக கப்போர்ட் - பெரியவை (கண்ணாடிக் கதவுடன்) | 55 | | | |
| 12.3 | அலுவலக கப்போர்ட் - சிறியவை (கண்ணாடிக் கதவுடன்) | 95 | | | |
| வகுதி இல. 04: அலுவலக தளபாடம் (2) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-13/2023 | | | | | |
| 13.1 | கைப்பிடியற்ற குஷன் கதிரைகள் | 77 | 5,000.00 | 593,400.00 | 296,700.00 |
| 13.2 | கைப்பிடியுடனான குஷன் கதிரைகள் | 270 | | | |
| 13.3 | சுழலும் கதிரைகள் | 185 | | | |
| 13.4 | ஹைபிரிட் கதிரைகள் | 600 | | | |
| வகுதி இல. 05: அலுவலக தளபாடம் (3) | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-14/2023 | | | | | |
| 14.1 | இழுவைப் பெட்டியுடனான அலுவலக மேசை | 80 | 3,000.00 | 159,300.00 | 79,650.00 |
| 14.2 | இழுவைப் பெட்டியுடனான அலுவலக மேசை - சிறியது | 90 | | | |
| 14.3 | நிறைவேற்றுநர் கதிரை | 9 | | | |
| வகுதி இல. 06: நீர்த் தாங்கிகள் | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-15/2023 | | | | | |
| 15.1 | நீர்த் தாங்கி - 500L | 1 | 4,000.00 | 10,460.00 | 5,230.00 |
| 15.2 | நீர்த் தாங்கி - 1000L | 2 | | | |
| 15.3 | நீர்த் தாங்கி - 2000L | 1 | | | |
| 15.4 | நீர்த் தாங்கி - 5000L | 3 | | | |
| வகுதி இல. 08: Display Boards | | | | | |
| ஒப்பந்த இல.: CPC/RDHS/KY/F13-1/NCB/1-16/2022 | | | | | |
| 16.1 | White Board | 2 | 2,000.00 | 900.00 | 450.00 |
| 16.2 | Notice Board | 1 | | | |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**எஹெலப்பொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி.**

# பேருவளை ருஸ்லான் ஹிஷாம் கொழும்பு லீக் அணிக்கு தெரிவு



பேருவளை விசேடம்

பேருவளை, சீனன்கோட்டை அல் ஹூமைஸரா தேசிய பாடசாலை மாணவன் ருஸ்லான் ஹிஷாம், 15 வயதுக்கு உட்பட்ட கொழும்பு லீக் கடினப் பந்து கிரிக்கெட் அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் களுத்துறை மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் தெரிவுச் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களின், திறமை அடிப்படையில் ருஸ்லான் ஹிஷாம் உட்பட 13 கிரிக்கெட் வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ருஸ்லான் சுழற்பந்து வீச்சாளராகவே அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது விளையாட்டு நுணுக்கங்களையும், ஆற்றலையும் பார்க்கும் போது, எதிர்காலத்தில் சிறந்த வீரராவார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்றும் இவருக்கு சிறந்த பயிற்சி வழங்குவதன் மூலம் இந்த இலக்கை அடைய முடியும் என்றும் ருஸ்லானுக்கு பயிற்சியளிக்கும் இலங்கை முன்னாள் வீரர் ரொமேஷ் ரத்னாயக்க தெரிவித்தார்.

# இலங்கையின் தடையை நீக்குவதற்கான நிபந்தனைகளை வலியுறுத்தியது பிஃபா



இலங்கை மீதான கால்பந்துத் தடையை நீக்கிக்கொள்ள விரும்பினால் நிபந்தனைகளுக்கு இணங்குமபடி சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிஃபா) மற்றும் அதன் பிராந்திய அமைப்பான ஆசிய கால்பந்து சம்மேளனம் ஒருமனதாக கேட்டுள்ளன.

மூன்றாம் தரப்பின் தலையீட்டை காரணமாகக் கூறி சர்வதேச கால்பந்து சம்மேளனம் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு கடந்த ஜனவரி 21ஆம் திகதி தடை விதித்ததோடு அந்தத் தடையை நீக்க மூன்று நிபந்தனைகளை விதித்தது.

இந்நிலையில் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் அங்கத்துவ சங்கங்களின் தலைமை அதிகாரி கென்னி ஜீன் மேரி மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளன பிரதி பொதுச் செயலாளர் வாஹித் கார்ட்னி கையொப்பமிட்டு அனுப்பப் பட்டிருக்கும் கடிதம் ஒன்றில், சர்வதேச தடையை நீக்குவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 14 ஆம் திகதி தேர்வு செய்யப்பட்ட நிறைவேற்றுக் குழுவை சர்வதேச கால்பந்து சம்மேளனம் அங்கீகரிக்காத நிலையில், இந்தக் கடிதம் ஜஸ்வார் உமர் தலைமையிலான முன்னாள் கால்பந்து நிர்வாகத்தின் பொதுச் செயலாளர் உபாலி ஹேவகேவுக்கே அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 10 ஆம் திகதி அமைச்சினால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதில் அளிக்கும் வகையிலேயே இந்தக் கடிதம் அமைந்துள்ளது. இதன்படி புதிதாக நிறைவேற்றப்பட்ட இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் சட்டத்தின்படி புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்கும் புதிய நிர்வாகக் குழு ஒன்று தேர்வு செய்யப்படும் வரையும் முந்தைய நிர்வாகக் குழுவை மீண்டும் நிறுவுவதற்கு புதிதாக நிறைவேற்றப்பட்ட இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் சட்டங்களை அங்கீகரித்து செயற்படுத்தும் பொருட்டு தற்போதைய தேசிய விளையாட்டு சட்டங்களில் இருந்து கால்பந்துக்கு விலக்கு அளிக்கும்படி வலியுறுத்தப்பட்டுள்ளது.

'குறிப்பாக, தேர்வுசெய்யப்பட்ட நிர்வாகத்திற்கான நான்கு ஆண்டு பதவிக்காலத்தின் தேவைகளுக்கு மதிப்பளிப்பதுடன், 2023 ஜனவரி 21ஆம் திகதி பிஃபா கௌன்சில் பணியகத்தின் முடிவில் எதிர்பார்க்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைச்சு உண்ணிப்பாக அவதானம் செலுத்தியதை எம்மால் அவதானிக்க முடிந்தது' என்று இந்தக் கூட்டாக வெளியிடப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனைகள் பிஃபா மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளனத்தினால் கூட்டாக உருவாக்கப்பட்டிருப்பதோடு, இலங்கை மீது தடை விதிக்கப்பட்ட சில மாதங்களுக்கு முன் இலங்கையுடன் பகிர்ந்துகொள்ளப்பட்ட முந்தைய கடிதங்களின் மறு பரிசீலனையாக உள்ளது.

# சிவானந்தா அணி வெற்றி



காரைதீவு குறூப் நிருபர்

காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகமும் ASCO அமைப்பும் இணைந்து நடத்திய கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு சிவானந்தா அணி வெற்றியீட்டியது.

காரைதீவு விபுலாநந்த மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (06) நடைபெற்ற இந்த போட்டியில் காரைதீவு கூடைப்பந்தாட்டக் கழகத்தை எதிர்கொண்ட சிவானந்தா அணி 52–45 என்ற புள்ளிகளால் வெற்றியீட்டியது. விளையாட்டு உத்தியோகத்தர் ப. வசந்த் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அஸ்கோ செயலாளர் சி. நந்தகுமார், உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் பிரதிநிதியாக டேனியல் ஆகியோர் உரையாற்றினர்.

# குறுந்தூர வீரர் அருண தர்ஷன ஜப்பானில் மீண்டும் சாதனை



உலக மெய்வல்லுனர் கண்டங்களுக்கிடையிலான சுற்றுத் தொடரின் வெண்கலப் பிரிவின் கீழ் நேற்று முன்தினம் (06) ஜப்பானில் நடைபெற்ற 10ஆவது கினாமி மிச்சிடகா ஞாபகார்த்த மெய்வல்லுனர் தொடரில் பங்குகொண்ட இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரர் அருண தர்ஷன 2ஆவது இடத்தைப் பிடித்தார். ஓசாகாவில் உள்ள நகெய் விளையாட்டரங்கில் நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட அருண தர்ஷன, போட்டித் தூரத்தை 45.49 வீனாடிகளில் நிறைவு செய்தார். அத்துடன், அந்தப் போட்டியில் தனது அதிசிறந்த நேரத்தையும் அவர் பதிவு செய்தார்.

மூன்று இறுதிப்போட்டிகளைக் கொண்ட இந்தப் போட்டியில், பதிவு செய்யப்பட்ட நேரங்களின்படி வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதன்படி, ஒட்டுமொத்த நிலையில் அருண தர்ஷனவுக்கு 2ஆவது இடத்தையே பெற்றுக்கொள்ள முடிந்தது. முன்னதாக கடந்த வாரம் ஜப்பானில் நடைபெற்ற 38ஆவது 'ஷிஸுஒக்கா' சர்வதேச மெய்வல்லுனர் தொடரில் பங்குகொண்ட அருண தர்ஷன, 400 மீற்றர் ஓட்டப் போட்டியை 45.59 வினாடிகளில் நிறைவு செய்து 2ஆம் இடத்தைப் பெற்றார்.

# அல் ஹிக்மா கல்லூரி: விளையாட்டு துறையை மேம்படுத்த நடவடிக்கை



ருஸைக் பாரூக்

கொழும்பு, வாழைத்தோட்டம் அல் ஹிக்மா கல்லூரியின் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் வகையில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இது தொடர்பான நிகழ்வு அண்மையில் கல்லூரியின் பழைய மாணவர் சங்க அலுவலகத்தில் கல்லூரி அதிபர் மஹ்சூர் முஸ்தபா மற்றும் பழைய மாணவர் சங்க உப தலைவர் எச்.எம்.எச். இஸ்மத் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரியின் விளையாட்டுத் துறைக்கு பங்களிப்பு செய்யும் வகையில் பழைய மாணவர் சங்கத்தினால் விளையாட்டு நிதியம் ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதேவேளை, பாடசாலைகளுக்கு இடையிலான நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் 'ரினவ்ன் பிரசிடன்ட் கிண்ண' உதைப்பந்தாட்ட போட்டியில் இறுதிச்சுற்றுக்கு தெரிவான அல் ஹிக்மா கல்லூரியின் உதைப்பந்தாட்ட குழாத்திற்கும் ஆதரவாளர்களுக்கும் என பழைய மாணவர் சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட ஜேர்சி அறிமுகம் செய்து உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

# பத்திரணவுக்கு தோனி அறிவுரை



இந்திய பிரீமியர் லீக் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக சோபித்து வரும் இலங்கை இளம் வேகப்பந்து வீச்சாளர் மதீஷ பத்திரண டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு பதில் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்று சென்னை அணித் தலைவர் எம்.எஸ் தோனி அறிவுரை வழங்கியுள்ளார்.



சென்னை அணியின் முக்கிய பந்து வீச்சாளராக மாறி இருக்கும் பத்திரண சேப்பாக்கத்தில் கடந்த சனிக்கிழமை (06) நடைபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தி சென்னை அணியின் வெற்றிக்கு உதவினார்.

இந்நிலையில் அந்தப் போட்டிக்குப் பின்னர் பேசிய தோனி கூறியதாவது, 'அதிக சிவப்புப் பந்து கிரிக்கெட்டில் ஆடக் கூடாதவராகவே தனிப்பட்ட முறையில் நான் அவரை பார்க்கிறேன். அவர் அதனை நெருங்கவே கூடாது என்று நான் நினைக்கிறேன்.

வெள்ளை பந்து கிரிக்கெட்டில் கூட, 50 ஓவர்கள் போட்டியில் குறைவாகவே ஆட வேண்டும். அவர் ஐ.சி.சி தொடர்களில் ஆட வேண்டும், ஏனென்றால் அவர் அதிகம் மாற்றங்கள் செய்யக் கூடியவரல்ல. குறுகிய காலத்திற்கு தாக்கம் செலுத்தக் கூடியவராக அவர் இருப்பதோடு அதனையே அவரால் செய்ய முடியும். எனவே தீர்க்கமான நேரங்களில் அவரை பயன்படுத்த முடியும்' என்று தோனி தெரிவித்தார்.

'என்றாலும் அனைத்து ஐ.சி.சி தொடர்களிலும் ஆடும் உடல் தகுதி பெற்றவராக அவர் உள்ளார். அவர் இலங்கைக்கு பெரும் சொத்தாகும். அவர் மிக இளமையானவர் என்பதை மறந்து விட வேண்டாம். கடந்த முறை (2022) அவர் வந்தபோது, சற்று ஒல்லியாக இருந்தார். ஆனால் இப்போது உடல் கட்டமைப்பு பெற்றுள்ளார், அதாவது சற்று பலம் பெற்றுள்ளார். அவர் மிக நீண்ட காலம் இலங்கை கிரிக்கெட்டில் இருப்பார் என்று நான் நினைக்கிறேன். என்றாலும் அவர் எவ்வளவு பந்து வீசுகிறார் என்பதில் நாம் அனைவரும் அவதானத்துடன் இருக்க வேண்டும்' என்றும் தோனி தெரிவித்தார்.

லசித் மாலிங்க பாணியில் பந்து வீசக் கூடிய பத்திரண ஐ.பி.எல் தொடரில் இதுவரை ஏழு போட்டிகளில் ஆடி 10 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அவரது விக்கெட்டுகள் அனைத்தும் தீர்க்கமான கடைசி ஓவர்களிலேயே வீழ்த்தப்பட்டுள்ளன.

# இம்ரான் க்வாஜா இலங்கை வருகை



இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு பற்றிய குற்றச்சாட்டு குறித்த உண்மையைக் கண்டறிவதற்கு சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் பிரதித் தலைவர் இம்ரான் க்வாஜா நாளை (09) இலங்கை வரவிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது. இதன்போது அவர் விளையாட்டுத் துறை அமைச்சர், இலங்கை கிரிக்கெட் அதிகாரிகள் மற்றும் ஏனைய தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அரசியல் தலையீடு குறித்து இலங்கை கிரிக்கெட் சபையிடம் இருந்து வந்த தொடர்ச்சியான முறைப்பாட்டை அடுத்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் ஜெய் ஷா தலைமையிலான மூவர் கொண்ட குழுவை ஐ.சி.சி நியமித்ததாக கூறப்படுகிறது. இதில் க்வாஜா மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தலைவர் நஸ்முல் ஹசனும் உள்ளடங்குகிறார்கள். இந்த நியமனத்தை அடுத்து இந்த விடயம் பற்றி பேச சந்திப்பு ஒன்றை கோரி விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஐ.சி.சி தலைவர் கிரே பார்க்ளேவுக்கு கடிதம் எழுதி இருந்தார்.

# சூடானின் போர் தரப்புகள் சவூதி அரேபியாவில் பேச்சு



சூடானில் போர் புரியும் இராணுவத் தரப்புகளின் பிரதிநிதிகள் சவூதி அரேபியாவில் முதல் முறை நேருக்கு நேர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

சூடான் இராணுவம் மற்றும் துணை இராணுவப் படையினர் அமெரிக்கா மற்றும் சவூதியின் மத்தியஸ்தத்துடன் ஜித்தா நகரில் கடந்த சனிக்கிழமை (06) இந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

சில வாரங்களுக்கு முன்னர் போர் வெடித்தது தொடக்கம் எட்டப்பட்ட பல போர் நிறுத்தங்களும் முறிந்தன. மனிதாபிமான போர் நிறுத்தம் பற்றி இரு தரப்பும் கூறியபோதும் மோதல் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில் பேச்சுவார்த்தைக்கு முந்திய சந்திப்பாக சவூதியில் இடம்பெற்றிருக்கும் இந்த சந்திப்புப் பற்றிய விபரம் வெளியாகவில்லை. எனினும் இந்தப் பேச்சுவார்த்தை மோதலை முடிவுக்குக் கொண்டுவர வழிவகுக்கும் என்றும் சவூதி வெளியுறவு அமைச்சர் பைசல் பின் பர்ஹான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதி மற்றும் துணைப் படை தலைவருக்கு இடையிலான முரண்பாடே மோதலாக வெடித்துள்ளது. இந்த மோதலில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டிருப்பதோடு சுமார் 450,000 பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 115,000க்கும் அதிகமானவர்கள் அண்டை நாடுகளில் அடைக்கலம் பெற்றிருப்பதாக புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

# அமெரிக்க வணிக வளாகத்திற்குள் துப்பாக்கிச் சூடு: 9 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தின் வணிக வளாகம் ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

டாலஸ் நகரின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள அந்த வணிக வளாகத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் குறைந்தது 7 பேர் காயமடைந்துள்ளனர்.

அலென் நகரில் உள்ள அலென் பிரிமியர் அவுட்லெட்ஸ் கடைத்தொகுதியில் ஆடவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாகச் சந்தேகிக்கப்படுகிறது. அவர் பொலிஸ் அதிகாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

காயமடைந்த 9 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவர் பின்னர் உயிரிழந்ததாகக் கூறப்பட்டது. காயமடைந்தோர் 5 வயதுக்கும் 61 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.



துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் யார்? எதற்காக தாக்குதல் நடத்தினார்? போன்ற விபரங்களை பொலிஸார் வெளியிடவில்லை. அதேபோன்று பலியானவர்களின் விபரங்களும் தெரிவிக்கப்படவில்லை. எனினும் கொல்லப்பட்டவர்களில் சிறுவர்களும் இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை அடுத்து நூற்றுக்கும் அதிகமானவர்கள் அந்த வணிக வளாகத்தில் இருந்து வெளியேற்றப்படும் வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன. அமெரிக்காவில் இவ்வாண்டு மட்டும் 198 பெரிய அளவிலான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நேர்ந்துள்ளன. நால்வர் அல்லது அதற்கும் மேற்பட்டோர் துப்பாக்கியால் சுடப்பட்ட சம்பவங்கள் பெரிய அளவிலான சம்பவங்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றன.

துப்பாக்கி கலாசாரத்தை தடுக்க அமெரிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. டெக்சாஸ் மாநிலத்தில் எந்த பயிற்சியும், உரிமமும் இன்றி யார் வேண்டுமானாலும் துப்பாக்கி வைத்துக் கொள்ள சட்டம் அனுமதி அளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 8ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.